நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 09 திங்கட்கிழமை (21.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 124




# கிளைமோர்த் தாக்குதலில் கருணாரட்ணம் அடிகளார் பலி


## மல்லாவி-மாங்குளம் வீதியில் சம்பவம்

(கிளிநொச்சி)

வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் தலைவர் மரியாம்பிள்ளை சேவியர் கருணாரட்ணம் அடிகளார்(வயது-57)வன்னியில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் பலியானார். மாங்குளத்தில் நேற்று முற்பகல் திருப்பலி ஒப்புக் கொடுத்து விட்டு வவுனிக்குளம் நோக்கி இவர் வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது மல்லாவி-மாங்குளம் வீதியில் அம்பாள்குளம் குழந்தை இயேசு கோவிலடிப் பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்ற இச் சம்பவத்தில் கருணாரட்ணம் அடிகளார் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)



## கிளைமோர்த் தாக்குதலுடன் இராணுவத்திற்குத் தொடர்பில்லை

### உதய நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளாரின் சம்பவத்திற்கும் இராணுவத்திற்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதல் சம்பவம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளதாகவும் இவ்வாறான தாக்குதல் சம்பவங்களின் போது விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது குற்றஞ்சுமத்துவது போலவே இத் தாக்குதல் சம்பவத்தையும் இராணுவத்தினர் மீது சுமத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆழ ஊடுருவும் அணியே தாக்குதலை நடத்தியுள்ளது

### விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் அருட்திரு எம்.எக்ஸ். கருணாரட்ணம் அடிகளாரின் படுகொலைக்கு இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினரே பொறுப்பு என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

தமது வாகனத்தில் அவர் சென்று கொண்டிருந்தபோது மல்லாவி-மாங்குளம் வழியில் அம்பாள்குளம் குழந்தை இயேசு கோவிலடியில் இக் கிளைமோர்த் தாக்குதல் இடம்பெற்றதாகவும் இளந்திரையன் பி.பி.ஸிக்குக் கூறியுள்ளார். (ச-2)

## இலங்கைக்கு ஆயுதம் வழங்க இஸ்ரேல் அரசாங்கம் மறுப்பு

(கொழும்பு)

ஈரானுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுவதால் ஆயுதங்களை வழங்கத் தமக்கு விரும்பம் இல்லை என்று இலங்கை அரசாங்கத்திற்கு இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

அண்மையில் இஸ்ரேலுக்குப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பயணம் மேற்கொண்டிருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலுக்கு எதிராகப் போராடுவதற்கு தங்களுக்கு ஆயுதங்கள் வழங்க வேண்டும் என்று அப் பயணத்தின் போது ரட்ணசிறி விக்கிரமநாயக்க சிறப்பு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இது தொடர்பில் இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் பாராக்கை நேரில் சந்தித்தும் அவர் வலியுறுத்தினார். ஆனால் ஈரானுடனான இலங்கையின் தொடர்புகளால் தமது ஆயுதங்களை இலங்கைக்கு வழங்க விருப்பமில்லை என்றும் எமது ஆயுதத் தொழில் நுட்பமானது ஈரானின் கைகளுக்குச் செல்லும் அபாயம் இருப்பதாகத் தாங்கள் அச்சப்படுவதாகவும் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிடம் இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் பாராக் தெரிவித்துள்ளார்.

மேலும் இஸ்ரேலிய ஆயுதக் கொள்வனவு முகவரான ஜவைகாவிடம் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க (10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று நடக்கும்

(யாழ்ப்பாணம்)

காங்சேன்துறைக்கும் திருகோணமலைக்குமிடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று நடைபெறும் என யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

நேற்றுப் பயணத்தை மேற்கொள்ள இருந்தவர்கள் இன்று தமது பயணத்தை மேற்கொள்ள முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்குமிடையிலான கப்பல் சேவை நேற்று நடைபெறாது என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## ஜே.வி.பியின் பிளவு குறித்து மகிந்த - ரணில் இரகசியப் பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் கடந்த வாரம் இரகசியச் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இந்தச் சந்திப்பின்போது மக்கள் விடுதலை முன்னணிக்குள் ஏற்பட்டுள்ள பிளவு குறித்தும் அதனால் அரசியல் நீரோட்டத்தில் ஏற்பட்டுள்ள சலசலப்பு மற்றும் ஜே.வி.பியின் பிளவு அரசாங்கத்திற்கா? ஐக்கிய தேசியக் கட்சிக்காக? சாதகமாக அமைந்துள்ளது என்பது தொடர்பாக இருவருக்குமிடையில் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாகத் தெரிகின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பகவதி மீது சட்ட நடவடிக்கைக்கு ஜாதிக ஹெலஉறுமய கோரிக்கை

(கொழும்பு)

சர்வதேச பிரமுகர்கள் குழுவின் தலைவரும் முன்னாள் இந்திய பிரதம நீதியரசருமான பி.என். பகவதி மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜாதிக ஹெலஉறுமய, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளைக் கண்காணிப்பதற்கு நியமிக்கப்பட்ட சர்வதேசப் பிரமுகர்கள் குழுவின் தலைவரான பகவதி, தனக்கு வழங்கப்பட்ட பணியினை உரிய முறையில் செய்யாதமைக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஹெலஉறுமய தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி (10 ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# விடுதலைப் புலிகள் யார் என்பதை உலகம் வெகுவிரைவில் உணரும்

## புலிகளின் தளபதி கேணல் ஆதவன்

(கிளிநொச்சி)

நாம் யாரென்பதனை கொடுக்கப்போகும் பதிலடிமூலம் உலகமும் சிங்கள தேசமும் வெகு விரைவில் உணரப்போகின்றது.

இது விரைவில் நடந்தே தீரும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் படையத் தொடக்க பயிற்சிக் கல்லூரித் தளபதி கேணல் ஆதவன் தெரிவித்துள்ளார்.

லெப்.கேணல் ஜெராட்டின் வீர வணக்க நிகழ்வு மந்துவில் வட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை ராதா வான்காப்பு படையணி ஆளுகைப் பொறுப்பாளர் செம்பியன் ஏற்ற, ஈகச்சுடரினை லெப். கேணல் ஜெராட்டின் தாய் தந்தையர் ஏற்ற மலர்மாலையினை துணைவியார் சூட்டினார்.

இந்நிகழ்வில் தளபதி கேணல் ஆதவன் ஆற்றிய உரையில்,

20 ஆண்டுகளாக விடுதலைப் போராட்ட வரலாற்றில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி தலைமைக்கு மிகவும் உறுதியான எழில் மிக்க தளபதியாக விளங்கியவர் லெப். கேணல் ஜெராட்.

நெருக்கடியான காலத்தில் எண்ணற்ற செயல்களை செய்த தளபதி, பல வடிவங்களில் மக்களுக்காக உழைத்துள்ளார்.

அவர் தனது பேராட்ட வாழ்க்கையில் மிகவும் விருப்போடு செயற்பட்ட ஓர் அற்புதமான தளபதி. அத்தகையோரின் வரலாற்றை சுமந்து தான் எமது மண்ணும் மக்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றனர்.

மிகவும் நெருக்கடியான காலங்களில் எல்லாம் தலைமையுடன் பக்க பலமாக நின்று எந்நேரமும் மக்களுக்காகவே வாழ்வதையே பெருமையாக கொள்வார்.

அவரது களமுனை வரலாறு தனித்துவமானது. கனரக போர்க் கலங்களைக் கையாள்வதில் பெரும் தந்திரமான தளபதி. இப்பொழுது நாம் எழுச்சி மிக்க காலத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறோம் என்றார் கேணல் ஆதவன். (ந-5)

# 'பிரபாகரன்' திரைப்படம் 25ஆம் திகதி வெளியீடு

(கொழும்பு)

'பிரபாகரன்' திரைப்படம் எதிர் வரும் 25ஆம் திகதி இலங்கைத் திரையரங்குகளில் திரையிடபபட வுள்ளதாக அதன் இயக்குநர் துஷார பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சென்னையிலுள்ள ஜெமினி ஆய்வு கூடத்தில் இந்த படத்தின் மூலப் பிரதிச் சுருள் நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதென்றுகுறிப்பிட்ட துஷார பீரிஸ் எனினும் இலங்கையிலுள்ள திரையரங்குகளில் திரையிடவுள்ளதாகவும் அவர் கூறினார்.

புதிய மூலப் பிரதிகளை பெறும் நோக்கில் நவீன தொழில் நுட்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும், இதற்கமைய பிரதிகள் இத்தாலி மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளின் ஆய்வு கூடங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் இயக்குநர் துஷார பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த செவ்வாய்க் கிழமை சென்னை நீதிமன்றம் ஒன்றினால் இந்தத் திரைப்படம் தொடர்பாக விசாரணைகள் இடம் பெற்றபோது தாம் இந்த திரைப் படத்தை பார்வையிட்ட பின்னரே தீர்ப்பு வழங்க முடியும் என்று நீதிபதி தெரிவித்துள்ளார். (ச-5)

# பொருளாதாரத் தடையை கனடா கொண்டுவர வேண்டும்

## -சொக் கொன்கெல்

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் காரணமாக இலங்கையின் மீது கனடா பொருளாதாரத் தடையைக் கொண்டுவரவேண்டும் என கனடாவின் கன்ஸவேட்டிவ் கட்சி நிதிச் சேகரிப்பாளர் சொக் கொன்கெல் கோரியுள்ளார்.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை வம்சாவளிகளும் ஒன்றாரியோ சட்டத்தரணிகளும் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கொலைகளுக்கும் கடத்தல்களுக்கும் இலங்கை அரசாங்கமே பொறுப்பர்க உள்ளது.

இந்த நிலையில் இலங்கையின் மீது பொருளாதார மற்றும் ராஜதந்திர தடைகளைக் கொண்டு வருவது தொடர்பாக கனேடிய அரசாங்கம் ஆராய வேண்டும் என அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (ச-5)

# கிராம சேவையாளர்களான கணவனும் மனைவியும் கொலை

(அம்பாறை)

அம்பாறை பாண்டியிருப்பு பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் கணவன் மனைவி ஆகிய இரண்டு கிராம சேவையாளர்கள் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக கல்முனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாண்டியிருப்பு காளிகோவிலடி பகுதியில் அமைந்துள்ள அவர்கள் வீட்டிலிருந்த சமயம், சேனைக் குடியிருப்புப் பகுதியின் கிராம சேவையாளராக பணியாற்றும் கந்தையா நாகராசா (வயது-47) அவரது மனைவியான குறுந்தையடிப் பகுதியில் கிராமசேவையாளராக பணிபுரியும் நாகரராசா ஆனந்தி (வயது 37) ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இக் கொலைச் சம்பவத்தினை மேற்கொண்டவர்களோ இதற்கான பின்னணியோ தமது ஆரம்ப விசாரணைகளின்படி கண்டறியப்பட வில்லை என கல்முனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-2)


வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம், உடுவில்
ஆட்பதிவு திணைக்கள கிளை அலுவலகம்

## திறப்பு விழா அழைப்பு

இடம்:- பிரதேச செயலகம், உடுவில்
காலம்:- 22.04.2008 பி.ப 1.00 மணி
தலைவர்:- செல்வி த.மஞ்சுளாதேவி (பிரதேச செயலாளர், உடுவில்)
பிரதம விருந்தினர்:- உயர்திரு. K.கணேஷ் (அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்)
சிறப்பு விருந்தினர்:- திருமதி T.ஸ்கந்தராஜா (பதவி நிலை உதவியாளர், ஆட்பதிவுத் திணைக்களம், யாழ்ப்பாணம்)
திரு N.பகீரதன் (முகாமையாளர்,தேசிய சேமிப்பு வங்கி,சுன்னாகம்)

உயர்திரு. K.கணேஷ் அவர்களால் ஆட்பதிவுத்திணைக்களத்தின் கிளை அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது.
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பிரதேச செயலாளரும்
உத்தியோகத்தர்களும்
வலி.தெற்கு. உடுவில்.

(C-1047)



# யா / புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்

# அதிபர் திரு.நல்லதம்பி இராசதுரை

# சேவை நலன் பாராட்டு சிறப்பு மலர்

## அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி



புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய அதிபர் திரு.நல்லதம்பி இராசதுரை அவர்கள் தனது பணியிலிருந்து இன்று ஓய்வு பெறுகிறார்.இவரது ஓய்வுக் காலம் பல்வேறு வகையிலும் சமூகத்திற்குப் பயனுடையதாக அமைய வேண்டும். சமூகத்திற்கு நல்லவொரு தலைமுறையை உருவாக்குவது ஆசிரியர், அதிபரின் பணியாகும்.அவ்வாறான பணியை மேற்கொண்ட இராசதுரை அவர்களின் ஓய்வுக் காலத்தில் அவரின் சேவைகளை நினைவு கூருதல் பயனுடையதாகும். இவர் தனது ஓய்வு காலத்தில் மேலும் பல சமூகப் பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்.

## பண்பாளனின் பணி தொடரட்டும்

*புங்கை நகர் தன்னில் புகழ்பூத்த குடும்பத்தில் தோன்றிக் கல்விப் பணியை கடவுள் பணியாக மேற்கொண்டு 21.04.2008 இன்று முதல் ஓய்வு பெறும் அதிபர் உயர்திரு.நல்லதம்பி இராசதுரை அவர்களின் சேவையை நினைவு கூருவதில் பெருமகிழ்வடைகின்றேன். 1991 இல் தீவக மக்கள் இடம்பெயர்ந்து பின்னர் 1996 இல் மக்கள் மீளக் குடியமர்ந்த கால கட்டத்தில் பலர் இப் பிரதேசத்திற்கு சேவை செய்யப் பின் நின்ற வேளையில் அன்னார் யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தின் அதிபர் பதவியைப் பொறுப்பேற்று பாடசாலையை மீளவும் புத்துயிர் பெற்று செயல்பட வைத்த செயல் வீரன்.கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றை அணிகலனாகக் கொண்டு மாணவர் கல்வி விருத்திக்குத் துணை நின்ற அர்ப்பணிப்பு மிக்க சேவையாளன். ஒரு நிறைவான பணியை திருப்தியாகச் செய்து இன்றுடன் ஓய்வு பெறும் பண்பாளரின் பணி மேலும் தொடரவும் பல்லாண்டு காலம் நலத்தோடு வாழவும் நயினை நாகபூசணி அம்பாள் அருள் புரியட்டும்.*

வி.இராதாகிருஷ்ணன்
பதில் வலயக் கல்விப் பணிப்பாளர்
தீவகக் கல்வி வலயம்,வேலணை.

(C-1049)



திரு.நல்லதம்பி இராசதுரை
(விசேட பயிற்சி விஞ்ஞானம், SLPS 2-II)
அதிபர், யா/ புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்.

**சேவைக்கால விபரம்**

21.02.1979 - 30.04.1979 கிளி/பூநகரி வலைப்பாடு றோ.க.வித்தியாலம்.
01.05.1979 - 31.12.1981 கிளி/சென்.திரேசா மகளிர் வித்தியாலம்.
01.01.1982 - 31.12.1983 பலாலி ஆசிரிய கலாசாலை
01.01.1984 - 30.04.1991 மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை.
01.05.1991 - 31.05.1996 யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்.
01.06.1996 - 03.08.2000 பதில் அதிபர் யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்.
04.08.2000 - 21.04.2008 அதிபர் யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்.

## சமூகப் பணி தொடரட்டும்



யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய அதிபர் திரு.ந.இராசதுரை அவர்கள் இன்று தனது சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். அவரின் சேவை நலன் பாராட்டு சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்வடைகின்றேன். அவர் தனது சேவைக் காலத்தில் சமூகத்திற்கும் பாடசாலைக்கும் ஆற்றிய சேவை குறித்து அறிந்துள்ளோன்.அதிபர் இராசதுரை அவர்கள்தனது ஓய்வுக் காலத்தில் சமூகப் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து தனது இடத்திற்கு சேவை செய்ய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

வி.இராசையா
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வடக்கு

## பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியவர்

எமது பாடசாலையின் ஆசிரியராக அதிபராக நீண்ட காலம் சேவையாற்றி தமது சேவையை இன்றுடன் பூர்த்தி செய்து இளைப்பாறும் அதிபர் அவர்கள் ஆசிரியர் குழாத்துடன் இனிமையாகப் பேசி இறுக்கமாகப் பழகி வேலை செய்விக்கும் திறன் வாய்ந்தவர். சிரித்த முகத்துடன் எல்லோரிடமும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் கருணையுள்ளம் அவருக்குச் சொந்தமானதாகும். மாணவர்களுக்கு தனது சேவைக்காலம் முழுவதும் விசேட வகுப்புக்களை நடத்தி கல்வித் தரத்தையும் பெறுபேற்றையும் உயர்த்திய உத்தம குணம் அனைவராலும் பாராட்டப்பட வேண்டியதாகும். பாடசாலையில் போதிய வசதிகள் இல்லாத நிலையிலும் மாணவர்களுக்குப் பல்வேறு வழிகளில் சேவையாற்றி எமது பாடசாலையில்சிறந்த பெறுபேற்றைப் பெற வழி செய்தவர். இவரது சேவை தொடர்ந்தும் சமூகத்திற்குக் கிடைக்க வேண்டும். அதிபரின் ஓய்வு நாளில் அவருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி மகாராணி கணேசன்
உப அதிபர் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்

**மலரமைப்பு:- பழைய மாணவர் சங்கம்**

# இன்று ஒரு தகவல்

## எதிர்மறை மனோபாவம்!

“கல்யாணத்துக்குப் போயிருந்தாயே, எப்படி இருந்தது? என்று கேட்டார் ஒருவர்.” எப்படி இருந்தது... சாப்பாடு சரியில்லை... சாம்பாரிலே உப்புப் பத்தாது. கறி வகை ஒரே காரம்... என்று அடுக்கிக் கொண்டே போனார் அடுத்தவர் இது ஒரு மனித சுபாவம். எப்பொழுதுமே எதிர் மறையான செய்திகளைப் பேசுவதில் தான் மனிதனுக்கு ஆர்வம் அதிகம். எது சரியாக இருந்தது என்பதைச் சொல்ல அவன் விரும்புவதில்லை.

ஒரு கண்ணாடி முன்னால் நின்று முகத்தைப் பார்க்கும் பொழுது முகத்தில் நமக்குப் பிடிக்காத பகுதியைத் தான் முதலில் கவனிப்போம். கன்னத்தில் ஒரு பரு இருந்தால் அதுதான் முதலில் கண்ணில்படும். கறுப்பு மச்சம் இருந் தால் அதுதான் தெரியும். காலையில் செய்தித்தாளைப் புரட்டுகிறீர்கள். எதிர்மறையான செய்திகளைத் தான் முத லில் பார்ப்போம்.

ஆக்கபூர்வமான செய்திகள் எல்லாம் அதற்கு அப்புறம் தான். ஒரு கும்பலில் கலவரம். பத்திரிகையில் கலவரத்தில் 10 பேர் இறந்தார்கள் என்றுதான் செய்தி வரும். கலவரத் தில் 918 பேர் உயிரோடு திரும்பியிருந்தால் அது செய்தியில் வரர்து. எத்தனை பேர் இறந்து போனார்கள் என்பதுதான் பத்திரிகைக்கு முக்கியம் ஏனென்றால் மனிதமனம் அதைத் தான் கவனிக்கிறது. அதனால் என்ன ஆகிறது தெரியுமா ? உலகத்தின் மகிழ்ச்சிகளை யெல்லாம் மறந்துவிடுகிறோம். வாழ்வின் வெளிச்சங்களை இழந்துவிடுகிறோம்.

இன்று விமானவிபத்தில் 214 பேர் உயிரிழந்தார்கள் என்பது எதிர்மறையான செய்தி. இன்று விமானத்தில் 2 இலட்சம் பேர் சுகமாகப் பயணித்தார்கள் என்பது நேரடியான செய்தி. ஆனால் செத்த செய்திதான் பத்திரிகையில் வரும் வாழ்க்கையின் சாதகமான அம்சங்களில் கவனம் செலுத்த நாம் கற்றுக்கொள்ளவேண்டும். இந்த உலகத்தில் நாம் மகிழ்வதற்கு நிறைய உண்டு. அவற்றையெல்லாம் கவனித்துப் பார்க்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

நமது பலம் என்ன என்பதில் அதிக கவனம் தேவை. தோல்வி மனப்பான்மை Negative Attitude; தாழ்வு மனப் பான்மை- Negative Self image எதிர்மறையாகவே நினைப்பது-பேசுவது என்கிற குணத்தை மாற்றிக்கொள் ளாதவன் எந்தக் காலத்திலும் முன்னேறவே முடியாது. வாழ்வில் வெற்றிபெற விரும்புகிறவர்கள் எதிர்மறை மனோபாவத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். Negative விஷயங்களில் இருந்து உங்கள் கவனத்தைத் திருப்புங்கள். Positive விஷயங்களில் கவனத்தைச் செலுத்துங் கள் வெற்றி நிச்சயம்.

ஒரே விஷயத்தைக்கூட சிலர் Positive ஆக எடுத்துக் கொள்வார்கள். சிலர் Negative ஆக எடுத்துக் கொள்வார்கள்.

ஒரு சத்திரத்தில் இரண்டு சாமியார்கள் சந்தித்துக் கொண்டார்கள். தங்களின் சொந்தக் கதைகளைப் பேசிக் கொண்டார்கள். “எனக்கு சம்சாரம் இல்லை; அதனாலே நான் சாமியாராக ஆகிவிட்டேன்” என்றார் ஒருவர். எனக்கு சம்சாரம் இருக்கிறா அதனாலே நான் சாமியாராகி விட் டேன் என்றார் இன்னொருவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## “இலங்கையில் அமைதியும் அபிவிருத்தியும்” நோர்வேயில் இருநாட் கருத்தரங்கு

(கொழும்பு)

“இலங்கையில் அமைதியும் அபிவிருத்தியும்” எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு இம்மாதம் 24ஆம் 25ஆம் திகதிகளில் நோர்வே தலைநகர் ஒஸ்லொவில் நடைபெறவுள்ளது.

இதில் நோர்டிக் நாடுகளில் வாழும் இலங்கையை சேர்ந்த கல்வியாளர்கள் மனிதாபிமான செயல்பாட்டாளர்கள் வரலாற்றாசிரியர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கையின் ஆயுத நெருக்கடி மற்றும் அமைதி முயற்சிகளில் மக்களின் வாழ்வாதாரம் அரசியல் பன்மைத்துவம் போன்ற விடயங்கள் குறித்து ஆய்வு கட்டுரைகளும் விவாதங்களும் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# இலங்கையின் கோரிக்கையை பிரித்தானியா நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்துவரும் அமைப்புகளின் செயல்பாடுகளை பிரித்தானியாவில் முடக்குமாறு இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கையினை பிரித்தானிய அரசாங்கம் நிராகரித்துள்ளது.

பிரித்தானிய உட்துறை அமைச்சர் டொனி மெக்னல்டியை சந்தித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக பிரித்தானியாவில் போராட்டங்களை மேற்கொண்டு வரும் அமைப்புகளை தடைசெய்யுமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கு பதிலளித்த பிரித்தானிய உட்துறை அமைச்சர் தமது நாட்டு சட்ட திட்டங்களை மீறாதவரையில் தம்மால் எந்த ஒரு நபர் மீதோ அல்லது அமைப்பினர் மீதோ நடவடிக்கை எடுக்க முடியாது என்று கூறியுள்ளார்.

தமது நாட்டில் உள்ள பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதற்குரிய சட்டங்களை எவராவது மீறி செயல்பட்டால் அவர்கள் மீது தமது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அதனை தவிர்த்து எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**ஜனநாயக ரீதியான போராட்டங்களை தடுக்க முடியாது**

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக பிரித்தானியாவில் நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்களை தடை செய்யும் நோக்கிலேயே ரோஹித் போகொல்லாகம இந்த கோரிக்கையை விடுத்திருந்தார்.

எனினும் ஜனநாயக ரீதியாக தமிழ் மக்களால் மேற்கொள்ளப்படும் போராட்டங்களை கட்டுப்படுத்தவோ தடுக்கவோ முடியாது என்று பிரித்தானிய அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# நளினி மகள் அரித்ரா எங்கே ? உளவுத்துறை திணறல்

(லண்டன்)

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றவர் நளினி. இவர் தற்போது வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவரைக் கடந்த மாதம் 19ஆம் திகதி ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா சந்தித்துப் பேசினார். இவர்களது சந்திப்பு நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் நளினியின் மகள் அரித்ரா தற்போது எங்கு இருக்கிறாள் என்பது மர்மமாக உள்ளது. அவள் வசிக்கும் இடத்தை உளவுத்துறை பொலிஸாரால் கூட கண்டுபிடிக்க முடியவில்லை.

உளவுத்துறை அதிகாரிகள் கூறும் போது, “அரித்ரா சிறையில் இருந்து முருகனின் தாயாருடன் வெளியே சென்றாள். அவளை முதலில் இலங்கைக்கு அழைத்துச் சென்று தங்க வைத்தனர்.

பின்னர் லண்டனுக்கு அழைத்துச் சென்றார். ஆனால் அரித்ரா தற்போது லண்டனில் இல்லை. ஒரு வேளை அவள் நோர்வேயில் தங்கியிருக்கலாம். அவள் வசிக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்து வரு கிறோம்” என்றார். இன்னொரு உள வுத்துறை அதிகாரி கூறும் போது. அரித்ரா 4 மாதங்களுக்கு முன்பு நோர்வேயில் தான் இருந்தாள். தற்போது எங்கு இருக்கிறாள் என்பது உறுதியாகத் தெரியவில்லை என்றார். (அ-5)

# இரண்டாம் தவணை இன்று ஆரம்பம்

நாட்டின் சகல தமிழ், சிங்கள் அரசாங்கப் பாடசாலைகளும் இந்த ஆண்டின் இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைக்காக இன்று திறக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

முதலாம் தவணை விடுமுறைக்காக சகல அரசாங்கப் பாடசாலைகளும் இம்மாதம் 9ஆம் திகதி முதல் மூடப்பட்டன. இந்நிலையில் முஸ்லிம் பாடசாலைகள் இரண்டாந் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக் காக இம்மாதம் 15ஆம் திகதி முதல் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள் ளன.

இதேவேளை தமிழ், சிங்களப் பாடசாலைகளின் இரண்டாந் தவணைக் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 1ஆம் திகதி நிறைவடையவுள்ளது. இவ்வருடம் 203 நாட்கள் பாடசாலைகள் நடைபெறும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. (அ-7)

## இராசிபலன்

*21.04.2008*
*(சித்திரை 09. திங்கட்கிழமை)*
*பிரதமை மாலை 05.37 மணிவரை*
*சுவாதி மாலை 05.57 மணி வரை*
*இராகுகாலம் 07.31-09.01 மணிவரை*
*சுபநேரம் 12.01-01.31 மணிவரை*
*தெல்லிப்பழை காசி விநாயகர் கொடி*

| | |
|---|---|
| மேடம் | திடீர்பயணம், அபூர்வசந்திப்பு, போசன சுகம், எடுத்த காரியம் கைகூடும். |
| இடபம் | பணவருவாய், திடீர் பயணம், சுக வாழ்வு, காரிய அனுகூலம். |
| மிதுனம் | தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, காரிய இடையூறு. |
| கடகம் | கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, தன்னம்பிக்கைக்குறைவு. |
| சிங்கம் | கூட்டுமுயற்சி, இனிய அனு பவம். வாக்கு மேன்மை. |
| கன்னி | மதிப்புக்குறைவு, பொருள்விரயம், முயற்சி தாமதம், மனச்சோர்வு. |
| துலாம் | பெரியோர் ஆசி, நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயனசுகம். |
| விருச்சிகம் | பிதாசிந்தை, உணர்ச்சிவசப்படல், பிரயாணம், சுபசெலவு. |
| தனுசு | தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, போசனசுகம். |
| மகரம் | சுபநிகழ்வு, நல்ல செய்தி, கடின உழைப்பு, பிறர் உதவி. |
| கும்பம் | ஆன்றோர் மகிழ்வு, உடல் உழைப்பு, அச்சமான நிலை, கட்டுப்பாடு. |
| மீனம் | எதிர்பாராத அச்சம், காரிய இடையூறு, வீண் தொல்லை, பணவிரயம். |

வளவன்





உ
பாலகணபதி துணை

அல்வாய் சாமணந்தறை
ஆலடிப்பிள்ளையார் கோவில் மஹோற்சவம்
11ஆம் நாள் பூங்காவனத்திருவிழா
(21.04.2008)

மாங்கனி கைப்பெற சுற்றுமூலகம் மாதாபிதாவென்று
பாங்குயர் தத்துவமுரைத்த பாசாங்குசன் - பூங்குயில்
கூவும் பூங்காவனம் ஏகவரும் கற்பகனைத்தோள்
காவிவரும் இளைஞர்விழாக் காண்பீர்

அத்திரு ஆல்தரு பதியுறை நிர்மலா
அநுக்க பூநூல் மார்பணி கணனே
வித்தக அறிவுடை சற்குண பதியாய்
விளங்கு தத்துவ சித்தி விநாயகா
சத்திரி முகத்து வடிவுடை விநோத
சக்தி மைந்தா சாந்த சொரூபா
புத்திகள் நிறைதரும் பூரண மதியே
பையலே ஆலடி ஐங்கர மூலவனே

(052) அல்வாயூர் சி.சிவநேசன்

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தர் விழாவில் அதிபர் திருமதி எஸ்.ஜெயவீரசிங்கம் உரையாற்றுவதையும், பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களையும் படத்தில் காணலாம்.

## அலங்கார உற்சவமும் கும்பாபிஷேகமும்

யாழ்.கோப்பாய் தெற்கு அத்தித் தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலய புதிய வசந்தமண்டபம் நூதன அம்பாள் எழுந்தருளி கும்பாபிஷேகம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.05 மணிமுதல் 7.45 மணிவரை உள்ள ரிஷப லக்கின சுப முகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

மே மாதம் 12ஆம் திகதி திங்கட்கிழமை அலங்கார உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற்று 11 ஆம் நாள் மூல நட்சத்திர கும்பாபிஷேக தினமான மணவாளக் கோலம் அம்பாளுக்கு 108 சங்குகளால் சங்காபிஷேகமும், விசேட பூசையும் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும். 10 நாட்களும் 10 மணிக்கு அபிஷேகமும், தொடர்ந்து விசேட பூசை உற்சவமும் இடம்பெறும். 23 ஆம்திகதி வெள்ளிக்கிழமை வைரவர் மடையும் இடம்பெறவுள்ளது. (அ-7)

## மின் ஒட்டும் பயிற்சி நிலையம்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் யாழ். மாவட்ட சர்வோதய நிறுவனத்தால் உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் மின் ஒட்டும் பயிற்சி நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சி நிலைய திறப்பு விழா அண்மையில் யாழ்.மாவட்ட சர்வோதய நிறுவன இணைப்பாளர் இ. சிவசுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெற்றது. விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சி.ஏ.மோகன்றாஜ் பயிற்சி நிலையத்தை வைபவ ரீதியாக திறந்துவைத்தார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சீ.வி. கே.சிவஞானம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பயிற்சிநெறிக்கு கோப்பாய்பிரதேச செயலர் பிரிவிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட இருபத்தைந்து இளைஞர், யுவதிகளும் கலந்து கொண்டனர். (அ-134)

## புத்தகக் கண்காட்சி

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச சபையின் கீழ் இயங்கும் மந்திகையிலுள்ள மத்திய நூல் நிலையத்தில் 23 ஆம் திகதி புதன்கிழமை புத்தகக் கண்காட்சி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இக் கண்காட்சியில் வாசகர்கள் தங்களிடம் இருக்கும் புத்தகங்களை காட்சிப்படுத்த முடியும். காட்சியின் பின் வாசகர்கள் புத்தகங்களை விரும்பினால் அன்பளிப்பு செய்யலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. (அ-35)

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோககேந்திரா நிலையத்தினரால் புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடப்புலம் நரசிங்க வைரவ ஆலய மஹோற்சவ காலங்களில் நடாத்தப்படும் சிறப்புச்சொற்பொழிவுகளின் ஒழுங்கில் 23 ஆம் திகதி புதன்கிழமை "கோமாதா எங்கள் குலமாதா" எனும் தலைப்பில் சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் கந்தசத்தியதாசனும், 24 ஆம் திகதி வியாழக்கிழமை "இறை பக்தியில் இன்பம் காண்போம்" எனும் தலைப்பில் சிதம்பரநாதன் சசீவனும் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளனர். (அ-7)

# காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்ற கலை இலக்கியப் பெருவிழா போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**கட்டுரை - சிரேஷ்ட பிரிவு**

ராஜ்குமாரி ஞானசோதி-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தி., குகப்பிரியா மயில்வாகனம்- (யாழ்ற்றன் கல்லூரி, வி.பாலேந்திரன்- யாழ்ற்றன் கல்லூரி.

**கனிஷ்ட பிரிவு**

தர்சினி கிளாஸ்டர் - கலாநிதி ஆ.தியாகராசா. ம.ம.வித்தி., சிந்துஜா தர்ம லிங் கம்- கலாநிதி ஆ.தியாகராசா. ம. ம.வித்தி., ப.கலைச்செல்வி- சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.

**கவிதை - சிரேஷ்ட பிரிவு**

ச.கோபிகா - கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தி, ந.பிரியதர்சினி - கலாநிதி ஆ.தியா கராசா. ம.ம.வித்தி., சசிந்தினி பரஞ்சோதி- கலா நிதி ஆ.தியாகராசா. ம.ம.வித்தி.

**கனிஷ்ட பிரிவு**


மிறோஜா கோமளேஸ்வரன்- கலாநிதி ஆ.தியாகராசா. ம.ம.வித்தி, ஆ.கஜன் - யாழ்ற்றன் கல்லூரி, சாத்விகா சிறிஸ்கந்தராஜா- கலாநிதி ஆ.தியாகராசா. ம.ம.வித்தி.

**சிறுகதை -சிரேஷ்ட பிரிவு**


செ.ஹேமாவதி - யாழ்ற்றன் கல்லூரி, வே.தேவகுமாரி - கலாநிதி ஆ.தியாகராசா ம. ம.வித்தி, க.நாகேஸ்வரி - யாழ்ற்றன் கல் லூரி.

**திறந்த பிரிவு**

ஆ.ஞானம்பிகை - களபூமி காரைநகர். (அ-7)




யாழ்.செய்திகள்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவில் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினரான யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம், சிறப்பு விருந்தினர்களான இ.ச.பேரம்பலம் அன்கோ உரிமையாளர் பே.நாகரத்தினம், பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் கல்வியியலாளர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# 'டெங்கு' கட்டுப்பாட்டு வாரம்

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்குநோய் கட்டுப்பாட்டு வாரம் ஏப்ரல் 28 ஆம் திகதி முதல் மே 3 ஆம் திகி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

வலி.மேற்கு (சங்கானை), வலி. தென் மேற்கு (சண்டிலிப்பாய்) ஆகிய இரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் டெங்கு நோய்க் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஊடாக பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் டி. ஜெயக்குமாரன் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் மற்றும் பிரதேசசபை பணி மனைகள், பொதுநலநிறுவனங்கள் ஆகியவற்றின் அனுசரணையுடன் டெங்கு நோய்க் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான ஒத்துழைப்பையும் ஆதரவையும் பொதுமக்கள் வழங்க வேண்டுமென சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். (அ-6)

## நூல் சேகரிப்பு வாரம்

(சாவகச்சேரி)

உலக புத்தக தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி நூலகத்தில் 14 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை நூல் சேகரிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதை முன்னிட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி அன்று வரணி நூலகத்தில் விசேட கருத்தரங்கும் புத்தக கையளிப்பு வைபவமும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-29)

## புத்தகக் கண்காட்சி நீடிப்பு

(சாவகச்சேரி)

உலக புத்தக தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொது நூலகத்தில் நடைபெறும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் பொதுமக்களின் வேண்டுகோளிற்கு இணங்க நாளை வரை நீடிக்கப்பட்டுள்ளதெனவும் பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை ஸ்தாபனங்களது காட்சிக்கூடங்கள் திறந்திருக்கும் என்றும் பிரதம நூலகர் திருமதி க. கணேசானந்தம் தெரிவித்துள்ளார். (அ-29)

## வருடாந்த விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டு விழா, நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2மணிக்கு ஸ்கந்தவரோதயாக கல்லூரி மைதானத்தில் உடுவில் (வலி.தெற்கு) பிரதேச செயலாளர் த.மஞ்சுளாதேவி தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி (பதில்) சி.துரைசிங்கம், கௌரவ விருந்தினர்களாக சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் சி.பெ.அரசகுமார், சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் மா.சந்திரகாந்தன், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு முதலாம் வருட மாணவர்களின் உதைபந்தாட்ட இறுதிப்போட்டி "றொக்கி எதிர் ஒலிவர் கான்" இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு இணைப்பாளர் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரமும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழக உடற்கல்வி அலகு இணைப்பாளர் கே.கணேசநாதனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)

## திறப்பு விழா

வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச செயலகத்தில் ஆட்பதிவு திணைக்கள கிளை அலுவலக-திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 1மணிக்கு, பிரதேச செயலாளர் செல்வி.த.மஞ்சுளாதேவி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விரந்தினராகக் கலந்து கொள்ளும் அரசாங்க அதிபர் க.கணேஷ் ஆட்பதிவுத் திணைக்களத்தின் கிளை அலுவலகத்தை திறந்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் ஆட்பதிவுத் திணைக்கள பதவி நிலை உதவியாளர் திருமதி ரி.ஸ்கந்தராஜா, சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் என். பகீரதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)

## சிறுகதைப் போட்டி முடிவுகள்

அகில இலங்கை கலை இலக்கிய சங்கம் நடாத்திய நாடகக் கலைஞர் கந்தையா வடிவேலு ஞாபகார்த்த சிறுகதைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்று பணப்பரிசில் பெறுபவர்களினதும், சான்றிதழ் பெறும் ஏனைய 10 பேரினதும் பெயர் விபரங்கள் வருமாறு,

ம.பா மகாலிங்கசிவம் - இணுவில் மேற்கு. ம.நிரேஸ்குமார் - தொழில்நுட்பக் கல் லூரி வவுனியா, வ.யாழினி- இ.தி.த.க. பாடசாலை வவுனியா.

**சான்றிதழ் பெறுவோர்**

பு.சிந்துஜா- கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம், திருமதி வி.வசந்தா- மட்டுவில் வடக்கு, சி.கதிர்காமநாதன் - தொல்புரம் கிழக்கு, திருமதி நா.ஆனந்தராணி- மகாத்மா வீதி நெல்லியடி, திருமதி சிவானந்தம் -மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை பருத்தித்துறை, பூ.மோகனா-ஆனைப்பந்தி, திருமதி பாக்கியராஜா - ஜெயசதனம் களுவாஞ்சிக்குடி, த.பரமலிங்கம்- குருநகர், Dr. கயிலாயர்-றிட்ச்வே பிளேஸ் பம்பலப்பிட்டி, யோ. அனுசுயா- திருக்குடும்ப கன்னியர்மடம் ஊர்காவற்றுறை. (அ-7)


## கோழி விற்பனை நிலையம்

(மருதங்கேணி)

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் மந்திகையிலுள்ள கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை வளாகத்தில் பிரதி சனிக்கிழமைதோறும் நடாத்தி வந்த கோழி விற்பனை நிலையம் விஸ்தரிக்கப்பட்டு சனிக்கிழமைகளிலும் புதன்கிழமைகளிலும் கோழிச்சந்தை நடைபெறுகிறது.


வடமராட்சியில் கோழி வளர்ப்போரின் கோரிக்கையை தொடர்ந்து கோழிச் சந்தை வாரத்தில் இரு நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ-35)






ஊர்காவற்றுறை சுருவில் வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆயுள்வேத மத்திய மருந்தகத்தை யாழ்.அரச அதிபர் க.கணேஷ் நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அருகில் நிற்பதையும் முதலாவது படத்திலும், மருந்தகத்தின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி செல்வி செ.கலைவாணி தலைமையுரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# சர்வதாரி வருடம் உங்களுக்கு எப்படி?




சர்வதாரி ஆண்டு 30.04.2008 அன்று ராகு -கேது பகவான்கள் தைரிய ஸ்தானம் மற்றும் பாக்கியஸ்தானத்திற்குப் பெயர்ச்சி ஆகிறார்கள். தைரிய ஸ்தானத்தில் இருக்கும் ராகு பகவானால் உங்களின் திறமை கூடும். சுறு சுறுப்புடன் காரியமாற்றுவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். சகோதர-சகோதரி வகையில் இருந்த மனக்கசப்புகள் நீங்கி மகிழ்ச்சி பொங்கும். புதிய நண்பர்கள் கிடைப்பர். சாதனையாளர் என்று பெயரெடுப்பீர்கள்.

பயணங்கள் உங்களைக் குதூகலப்படுத்தும். சுகபோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பாக்ய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது பகவான். உங்கள் மனதில் உற்சாகத்தை ஊட்டுவார். நடக்காது என்று நினைத்த காரியங்கள் நடக்கும்.

மனதிலிருந்த அழுத்தங்கள் விலகும். அதேநேரம் கேது பகவான், தந்தையின் உடல்நலத்தில் ஒரு தொய்வை உண்டாக்குவார். உங்கள் பேச்சில் சிறிது ஆணவம் தோன்றும். எவரையும் அலட்சியப்படுத்தாமல் கண்ணியத்துடன் நடந்துகொள்ளுங்கள்.

இந்த ஆண்டு இறுதிவரை. குரு பகவானின் பார்வையில் அமர்ந்துள்ள சனி பகவானால் தொழிலிலும் ஸ்திரத்தன்மை உண்டாகும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். உங்களை எதிர்த்தவர்கள் மறைந்துவிடுவார்கள். உங்களின் அசாத்திய துணிச்சல் அனைவர்க்கும் பிரமிப்பை ஏற்படுத்தும். இந்த ஆண்டு இறுதிக்குப் பிறகு தொழில் ஸ்தானத்தில் தனித்து இயங்கும் சனி பகவான் உங்கள் திட்டங்களை முடிப்பதில் தாமதப்படுத்துவார். வரவேண்டிய பணம் வராமல், புதிய கடன்களைப் பெற்று நிலைமையைச் சமாளிப்பீர்கள்.

இந்த ஆண்டு இறுதிவரை தனம், வாக்கு, குடும்ப ஸ்தானங்களில் சஞ்சாரம் செய்யும் குரு பகவானால் உங்களின் பேச்சாற்றல் மிகும். தனம் கூடும். விவேகம் பெருகும். நுட்பமாக சிந்திக்கும் ஆற்றலைப் பெறுவீர்கள். குடும்பத்தில் வம்ச விருத்தி உண்டாகும். அதன் பிறகு குருபகவான் தைரிய ஸ்தானத்தில் ராகு பகவானுடன் கூடுவதால் உங்களின் பெருந்தன்மை அதிகரிக்கும். செய்நன்றி மறக்கமாட்டீர்கள். உங்கள் முதலீடுகள் எதிர்பார்த்த லாபத்தைக் கொடுக்கும்.

உத்தியோகத்தர்கள் நல்ல முன்னேற்றத்தைக் காண்பர். திட்டமிட்ட வேலைகளை உடனுக்குடன் முடிக்கும் ஆற்றலைப் பெறுவீர்கள். அதேசமயம் மேலதிகாரிகளின் ஆதரவு குறைவாக இருப்பதால் எதையும் வெளிப் படையாகப் பேசவேண்டாம். மேலும் உங்களின் கோரிக்கைகள் சற்று தாமதமாகவே பரிசீலிக்கப்படும். மற்றபடி அலுவலக ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும். புதிய பயிற்சிகளை மேற்கொள்வீர்கள்.

வியாபாரிகள் நல்லவர்களுடன் கூட்டு சேர்ந்து பலனடைவர். வாராக்கடன்கள் திரும்பிவந்து உங்களை ஆச்சரியப்படுத்தும். புதிய சந்தைகள் மூலம் லாபம் பெறுவீர்கள். அதே நேரம் கணக்கு வழக்குகளைச் சரியாக வைத்து அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவும். உங்கள் முயற்சிகளை கூட்டாளிகளிடம் விளக்கி விட்டுச் செயல்படுத்துவீர்கள். இது உங்களின் தனித்தன்மையைக் கூட்டும். சமுதாயத்தில் உங்களின் செல்வாக்கு உயரும்.

விவசாயிகள் விளை பொருட்களால் லாபமடைவர். நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்க எடுக்கும் முயற்சிகள் நன்மையளிக்கும். அதே சமயம் புதிய குத்தகைகளை எடுக்க வேண்டாம். மேலும் வயல் வரப்புச் சண்டைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். மற்றபடி தன்னலம் பாராட்டாமல் அடுத்தவர்கள் வளம் பெற செயலாற்றுவீர்கள். விவசாயிகள் மத்தியில் செல்வாக்குடன் வலம் வருவீர்கள். அரசியல்வாதிகளுக்கு கட்சி மேலிடத்தின் ஆதரவு நன்றாக இருக்கும். அதே சமயம். கட்சி மேலிடத்திற்குத் தகவல் அனுப்பும்போது எச்சரிக்கையுடன் இருக்கவும். உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேலைகளைத் திட்டமிட்டு நன்கு செயல்படுத்துவீர்கள். தொண்டர்களின் ஆதரவு நன்றாக இருக்கும் உங்கள் மீதான வழக்குகள் சாதகமாக முடிவடையும்.

கலைத்துறையினருக்கு அதிக முயற்சிகளுக்குப் பிறகே ஒப்பந்தங்கள் கிடைக்கும். அவற்றை உங்களின் முழுத்திறமையையும் பயன்படுத்தி நன்றாகச் செய்து முடிப்பீர்கள். இதனால் பாராட்டும், பணவரவும் கிடைக்கும். சக கலைஞர்கள் இந்தக் காலகட்டத்தில் உங்களுக்கு உதவமாட்டார்கள். அவர்களிடம் பொறுமையுடன் அனுசரித்து நடந்துகொள்ளவும்.

பெண்மணிகள் பணவரவு நன்றாக இருப்பதால் ஆடம்பரப் பொருட்களை வாங்குவார்கள். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்க வாய்ப்புண்டாகும். அதே சமயம் கணவரிடம் ஒற்றுமையாகவும் கணவர் வழி உறவினர்களிடமும் சுமுகமாகவும் இருங்கள்.

மாணவர்கள் படிப்பில் ஆர்வம் செலுத்தினால்தான் எதிர்பார்த்த மதிப்பெண்களைப் பெறலாம். பெற்றோர்களின் ஆதரவு தொடர்ந்து நன்றாகவே இருக்கும். மற்றபடி உள்ளரங்கு விளையாட்டுகளில் வெற்றி காண்பீர்கள்.

(தொடரும்)

## மக்களை விழிப்பாக இருக்குமாறு மின்சாரசபை முகாமையாளர் வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றிகளுக்கு அருகில் வசிக்கும் மக்களை விழிப்பாக இருக்குமாறு மின்சாரசபையின் பொது முகாமையாளர் ரஞ்சித்புள்ளே பெரும வேண்டுகோள் விடுத்துள்ளார். கண்டி பன்வில மற்றும் யக்கஹ வெல பகுதிகளில் அமைந்துள்ள மின்மாற்றிகள் தகர்க்கப்பட்ட சம்பவத்தை அடுத்தே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இந்த மின்மாற்றி தகர்ப்பு தொடர்பான இரசாயண பகுப்பாய்வு அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை என்றும் அந்த அறிக்கை கிடைத்த பின்னரே இச்சம்பவத்திற்கான காரணத்தை வெளியிடமுடியும் என தெரிவித்துள்ளார். இந்த மின்மாற்றி தமிழீழ விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டிருக்கலாம் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் என்.கே. இலந்தக்கோன் தெரிவித்துள்ளார். (அ-2)

## ஜே.வி.பி.யின் 5ஆவது மாநாடு மே 27 இல்

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் 5ஆவது தேசிய மாநாடு மே மாதம் 27ஆம் திகதி சுகததாச விளையாட்டு அரங்கில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதிலுமிருந்தும் பெருந்தொகையான கட்சி அங்கத்தவர்கள் இம் மாநாட்டில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநாட்டில் இன்றைய அரசியல் நிலைமை, கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி, எதிர்காலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளதுடன் புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## பிரிந்தவரை மீண்டும் இணைக்க ஐ.தே.கட்சி தீவிர முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து பிரிந்து அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களை பெற்றுக்கொண்டுள்ள சிலரை மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சிக்குள் உள்வாங்குவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக கட்சி வட்டாரங்கள் மூலம் தெரியவருகின்றது.

இப் பேச்சுவார்த்தைகள் கடந்த வாரம் பல தடவை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவுடன் இடம்பெற்றுள்ளது. தற்போது ஐக்கிய தேசியக்கட்சியின் பிரமுகர்கள் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் பிரசார பணிகளில் ஈடுபடுவதனால் இப் பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருப்பதாகவும் தேர்தலின் பின்னர் தொடரும் எனவும் ஐ.தே.க. வட்டாரம் மேலும் தெரிவித்தது. (ந-5)

## பிரியங்கா – நளினி சந்திப்பு குடும்பத்திற்கே உரித்தான கருணை

### சி.பி.ஐ.முன்னாள் இயக்குநர் கார்த்திகேயன்

(சென்னை)



பிரியங்கா நளினி சந்திப்பு பற்றி ராஜீவ் கொலை வழக்கை விசாரித்தவரும், முன் னாள் சி.பி. ஐ.இயக்கு நருமான டி.ஆர். கார்த்திகேயன் கூறியதாவ து, பிரியங்காவுக்குநல்ல மனம் இருக்கிறது. அதுவும் இளகிய மனம் என்ற பெரிய மனம் இருக்கிறது. ஆன் மீகத்தில் ஈடுபாடு இருந்தால் மட்டுமே இது மாதிரி மனம் வரும். அந்த மனம் பிரியங் காவிற்கு இருக்கிறது. கருணையும், மனத்தெளிவும் அவர் குடும்பத்திற்கு உரியது. அவர்து தந்தையான ராஜீவ் காந்தியும் கருணை மிக்கவர் . தாய் சோனியாவும் கருணை மிக்கவர்.

அதனால்தான் தூக்குத் தண்டனை பெற்ற நளினிக்கு கருணைகாட்டி அதை ஆயுள் தண்டனையாகக் குறைக்க பிரியங்காவின் அன்னை சோனியா உதவினார். பிரியங்காவின் இந்த அணுகுமுறை பாராட்டத் தக்கது. (அ-5)

## கட்டுப்பாட்டு விலையில் அரிசி விற்பனை மொத்த வியாபாரிகள் சங்கம் முடிபு

(கொழும்பு)

அசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையில் இன்றுமுதல் அரிசியை விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளதாக புறக்கோட்டை சோனக தெரு மொத்த வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இதற்கமைய சில்லறை வர்த்தகர்களுக்கு மாத்திரம் அரிசியை விற்பனை செய்ய உள்ளதாக சங்கத்தின் செயலாளர் கே.பழனியாண்டி தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்க கட்டுப்பாட்டு விலையைவிட கூடுதல் விலைக்கு அரிசி விற்பனையில் ஈடுபடும் அரிசி வர்த்தகர்களைச் சுற்றிவளைக்க இன்று முதல் விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது பொலிஸார், இராணுவத்தினர் உட்பட நுகர்வோர் அதிகார சபையின் விசாரணை அதிகாரிகளின் ஒத்துழைப்புப் பெறப்பட உள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய அரிசியைப் பதுக்கி வைத்திருக்கும் பட்சத்தில் அவற்றைக் கைப்பற்றவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-7)

## ரணிலுக்கு ஹெலி வழங்க ஜனாதிபதி இணக்கம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் பங்குபற்றும் பொருட்டு கிழக்கு மாகாணத்திற்கு சென்று வருவதற்கு ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஹெலிகொப்டர் வசதியை ஏற்படுத்திக்கொடுக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாகக் கட்சியின் தவிசாளர் ருக்மன் சேனாநாயக்கா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவருக்கு ஹெலிகொப்டர் வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்ட்டிருந்த நிலையில் ஜனாதிபதியை எதிர்க்கட்சித் தலைவர் சந்தித்த போது ஹெலிகொப்டர் விடயம் குறித்து தெரிவித்திருந்ததை யடுத்தே கிழக்கு மாகாணத்திற்கு ரணில் சென்று வர ஹெலிகொப்டர் வசதியை வழங்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். (ந-5)


# 31ஆம் நாள் நினைவுகூரல்

## அமரர் சூசைப்பிள்ளை ஞானமலர்

அன்னை மடியில் 17 ◆ 09 ◆ 1946

இறைவன் இல்லத்தில் 23 ◆ 03 ◆ 2008



உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்

அம்மா என்றழைக்க நீங்கள் இல்லை
ஆறுதல் தர யாரும் இல்லையே
அன்போடு அரவணைத்த நீங்கள் இல்லை
எங்களை அல்லலுறச் செய்து விண்ணுலகம் சென்றீர்களோ ?

பாசப்பறவைகளாய் வாழ்ந்தோம்
தாய்ப்பறவை நீங்கள் மட்டும் பறந்தது ஏன்?
பாசக்குலக் கொடிகள் நாம் தவிக்கிறோம்
பரமனிடம் எமக்கும் இடம் கேட்கச் சென்றீர்களோ?

இவரின் ஆத்ம சாந்திக்காக நாளை 22.04.2008 செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு பொலிகண்டி குழந்தை யேசு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து மதியம் விருந்துபசாரமும் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இவரின் பிரிவால் துயரும்
சகோதரர், பிள்ளைகள், மருமக்கள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள் உற்றார் உறவினர்.

தகவல்
சூ.அன்ரன்
சி.மரியநாயகம்
திக்கம்.

(1092)

# இரண்டு ஆயிரம் கி.மீ. சென்று தாக்கவல்ல ஏவுகணை வெற்றிகரமாகப் பரிசோதனை

(இஸ்லாமாபாத்)


2ஆயிரம் கி.மீ. தூரம் பாய்ந்து சென்று இலக்கை தாக்கவல்ல அணு ஆயுத ஏவுகணையை பாகிஸ்தான் வெற்றிகரமாக சோதித்துப் பார்த்தது.

பாகிஸ்தான் கடந்த டிசம்பர் மாதத்தில் இருந்து பெப்ரவரி மாதம் வரை பல தடவை ஏவுகணை சோதனைகளை நடத்தியது. இந்நிலையில், புதிய அரசு பதவி ஏற்ற பிறகு முதல் முறையாக நேற்று முன்தினம் பாகிஸ்தான், ஏவுகணை சோதனை நடத்தியது. இந்த ஏவுகணையின் பெயர் ஷகீன் -2 அல்லது ஹட்ப் -6 ஆகும்.

இது தரையில் இருந்து பாய்ந்து சென்று தரையில் உள்ள மற்றொரு இலக்கை துல்லியமாக தாக்கக் கூடியது. 2ஆயிரம் கி.மீ. தூரத்துக்கு பாய்ந்து சென்று இலக்கை குறிபார்த்து தாக்கவல்லது. இதன்மூலம், இந்தியாவில் உள்ள இலக்குகளைக் கூட தாக்கமுடியும். இந்த ஏவுகணையில், அணு ஆயுதங்களையும், வழக்கமான ஆயுதங்களையும் ஏற்றி வைத்து எதிரிகளின் இலக்குகளை தாக்க முடியும்.

**பிரதமர் பார்த்தார்**

இந்த ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. சோதனை நடத்தப்பட்ட இடம் பற்றிய விவரம் வெளியிடப்படவில்லை. ஆனால் சோதனையை பிரதமர் யூசுப் கிலானி, இராணுவ மந்திரி அகமது முக்தர், கூட்டு



இராணுவ கொமிட்டி தலைவர் தாரிக் மஜீத் ஆகியோர் நேரில் பார்த்தனர்.

சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டதை தொடர்ந்து, இதில் ஈடுபட்ட விஞ்ஞானிகளுக்கும், அதிகாரிகளுக்கும் பிரதமர் கிலானி பாராட்டும், வாழ்த்துக்களும் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

இந்த ஏவுகணை சோதனை, பாகிஸ்தானின் பாதுகாப்பு வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும். எங்களது புதிய அரசு, பாகிஸ்தானின் பாதுகாப்பு தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும். நாட்டின் இராணுவ திட்டங்களுக்கு நாடுமுழுவதும் ஒருமித்த ஆதரவு நிலவுகிறது. பாதுகாப்பு தேவைக்கு ஏற்ப, நாட்டின் இராணுவதிட்டங்கள் பலப்படுத்தப்படும். இருப்பினும், தெற்கு ஆசியாவில் அமைதி நிலவ நாங்கள் உறுதி அளிக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

**முஷாரப் பாராட்டு**

ஷகீன் -2 ஏவுகணை சோதனை வெற்றிக்காக, அதிபர் முஷாரப்பும் விஞ்ஞானிகளுக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இந்த ஏவுகணை கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் முறையாக சோதித்துப் பார்க்கப்பட்டது. இதையடுத்து, நேற்றுமுன்தினம் இரண்டாவது முறையாக சோதித்துப் பார்க்கப்பட்டது. (அ-5)

## பங்களாதேஷ் பஸ் விபத்தில் 18 பேர் பலி

(டாக்கா)

பங்களாதேஸின் தலைநகர் டாக்கா நோக்கி சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் தங்கைல் மாவட்டம் ஜமுனா பாலம் அருகே சென்றபோது, திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடி, அருகில் உள்ள தண்டவாளத்தில் தலைகுப்புற கவிழ்ந்தது. இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 16 பேர் பலியானார்கள். ஆஸ்பத்திரிக்கு செல்லும் வழியில் 2 பேர் பலியானார்கள். 51பேர் காயம் அடைந்தனர்.

பலியானோர் மற்றும் காயம் அடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாய தொழிலாளர்கள் ஆவர். அவர்கள் டாக்கா உள்ளிட்ட பகுதிகளில் நெல் அறுவடைக்காக சென்றபோது இந்த விபத்து நடந்தது. (அ-5)

## உலக தரிசனம்

# அரண்மனையிலிருந்து வெளியேற —மன்னருக்கு 4 வார கெடு—

நேபாளத்தில் நடைபெற்ற தேர்தலில் மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியை பிடித்துள்ளது. மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மன்னர் ஆட்சி முறையை எதிர்த்து பலவருடங்களாகப் போராடி வந்தனர்.

தற்போது மாவோயிஸ்ட்டுகள் தேர்தலில் வெற்றிபெற்றதையடுத்து மன்னருக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் பாபுராம்பட்டாராய் கூறுகையில், நேபாளத்தில் மன்னர் ஆட்சி ஒழிக்கப்பட்டு விட்டது. மன்னர் ஞானேந்திரா அரண்மனையை விட்டு வெளியேறி சாதாரண குடிமகனாக வசிக்க வேண்டும் இல்லையெனில் மக்களே அரண்மனைக்குள் புகுந்து அவரை வெளியேற்றுவார்கள் என்றார். மன்னர் வெளியேற அவர் 4 வாரகெடுவும் விதித்தார். மன்னர் நேபாளத்திலோ அல்லது இந்தியாவிலோ எங்கு வசிக்க விரும்புகிறாரோ அங்கு வசிக்கலாம் என்றும் பாபுராம் கூறினார். மாவோயிஸ்ட்டுகள் எச்சரிக்கையால் மன்னர் ஞானேந்திரா அரண்மனையை விட்டு வெளியேற முடிவு செய்துள்ளார். அவர் இந்தியாவில் தஞ்சம் அடைவார் என்று கூறப்படுகிறது.


மன்னர் ஞானேந்திராவின் மருமகள் ஹிமானி இந்தியாவைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. எனினும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப்முகர்ஜி, நேபாளமன்னரிடமிருந்து புகலிடம் கேட்டு எந்த கோரிக்கையும் வரவில்லை என்று கூறியுள்ளார்.

இதன்மூலம் 250 ஆண்டுகளாக நேபாளத்தில் இருந்த மன்னர் ஆட்சி முறை முடிவுக்கு வருகிறது. மன்னர் காலி செய்ததும் அரண்மனையை அருங்காட்சியகமாக மாற்றி பொது மக்கள் பார்வைக்கு திறந்துவிட மாவோயிஸ்ட்டுகள் முடிவு செய்துள்ளனர். இதற்கிடையே மாவோயிஸ்ட்டுகளின் மற்றொரு தலைவரான பிரசந்தா மன்னர் ஞானேந்திராவை சந்திக்க விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

மன்னர் ஆட்சி முடிவுக்கு வருவதால் இது தொடர்பாக மன்னரை சந்தித்து பேச இருக்கிறேன். மக்கள் மன்னர் ஆட்சிக்கு எதிராக வாக்களித்து இருக்கிறார்கள். மக்களின் முடிவை மன்னர் புரிந்து கொண்டு அரண்மனையை காலி செய்து அவர்களது விருப்பத்தை நிறை வேற்ற வேண்டும் என்று பிரசந்தா கூறினார். (அ-5)

# பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் உலாவை ஒழிக்க புஷ்சிடம் திட்டம் இல்லை

## வெளியுறவுத்துறை அரசு ஏஜென்சி குற்றச்சாட்டு



''பாகிஸ்தானில் இராணுவம் மற்றும் பொலிஸார் நுழைய முடியாதபடி, ஆப்கான் எல்லையில் உள்ள பழங்குடியினர் பகுதியில், தலிபான்மற்றும் அல்-கொய்தாபயங்கரவாதிகள் சுதந்திரமாக உலா வருகின்றனர். அவர்களை ஒழிக்க அதிபர் புஷ் ஆட்சியில் திட்டம் இல்லை'' என்று அமெரிக்க அரசு ஏஜென்சிபகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறது. இதுதொடர்பாக, அமெரிக்க வெளியுறவுத்துறை அரசு ஏஜென்சி கூறியிருப்பதாவது,

பாகிஸ்தானின் இராணுவம், பொருளாதாரம் மற்றும் மேம்பாட்டுக்காக, அமெரிக்கா ரூ44 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக வழங்கியுள்ளது. ஆப்கானிஸ்தானில் எல்லையில், பழங்குடியினர் தாங்களே நிர்வகித்துக்கொள்ளும் பகுதிகளில், பாக். பொலிஸார் நுழைய முடியாது. இப்பகுதிகளில் சுதந்திரமாக உலவி வரும் பயங்கரவாதிகளை முழுமையாக ஒழிக்க அமெரிக்காவிடம் திட்டம் இல்லை. கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் பயங்கரவாதி களையும், அவர்களின் அச்சுறுத்தலையும் ஒழித்துக் கட்டுவதே அமெரிக்காவின் முக்கிய குறிக்கோளாகும்.

பழங்குடியினர் பகுதியில் பயங்கரவாதிகள் சுதந்திரமாக உலாவுவதை தடுக்காததன் மூலம், தனது தேசிய பாதுகாப்பு இலக்கை அமெரிக்கா அடையவில்லை. கடந்த ஐந்து ஆண்டுகளில், பாகிஸ்தான் பழங்குடியினர் பகுதியில் பயங்கரவாதிகளை ஒழித்துக்கட்டுவதற்காக மட்டும் .ரூ.24ஆயிரம் கோடியை அமெரிக்கா வழங்கி உள்ளது. அத்துடன், அங்கு நடத்தப்படும் இராணுவநடவடிக்கைக்கு ஏற்படும் செலவில், 96 சதவீதத்தையும் அமெரிக்கா வழங்குகிறது.

ஆனாலும், பாகிஸ்தான், ஆப்கான் எல்லைப் பகுதியில் தீவிரவாதிகளை வேட்டையாட, அமெரிக்க படையினர் தொடர்ந்து நிறுவப்பட்ட போதும் பலன் இல்லை இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-5)

# பாகிஸ்தான் தூதர் தலிபானின் பிடியில்

(காபூல்)

ஆப்கானிஸ்தானுக்கான பாகிஸ்தான் தூதர் தாரிக் அசிசுதீன் கடந்த பெப்ரவரி மாதம் பாகிஸ்தான் வந்துவிட்டு ஆப்கானிஸ்தானுக்கு கார் மூலம் திரும்பிக்கொண்டிருந்தார்.

கைவபர்கணவாய் வழியாகச் சென்ற அவர் திடீரென மாயமாகிவிட்டார். அவர் என்ன ஆனார்? யாராவது கடத்திச் சென்றுவிட்டார்களா? என்பது தெரியாமல் இருந்தது.

இப்போது அவர் தலிபான்கள் பிடியில் இருப்பது தெரியவந்துள்ளது. தலிபான்கள் ஒரு வீடியோ வெளியிட்டுள்ளனர். அது அல்ஜசீரா டெலிவிஷனில் ஒளிபரப்பப்பட்டது. அதில் தலிபான்கள் தாரிக் அசிசுதீனை துப்பாக்கி முனையில் கடத்தி வைத்திருப்பது காட்டப்பட்டது.

அதன் பின்னணியில் பேசிய தலிபான்கள் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஜெயிலில் இருக்கும் தலிபான் முக்கிய தளபதிகளை விடுதலை செய்யவேண்டும். இல்லை என்றால் அவரை கொன்று விடுவோம் என்று மிரட்டினார்கள். தாரிக் அசிசுதீன் தாடி வளர்த்து சோகமாகக் காணப்பட்டார்.

அவர் வீடியோவில் பேசியதாவது,

தலிபான்கள் கோரிக்கையை நிறைவேற்றி என் உயிரைக் காப்பாற்றுங்கள் அவர்கள் என்னை பெப்ரவரி 11ஆம் திகதி கடத்தினார்கள். இன்று வரை என்னை தங்கள் விருந்தினராகவே வைத்துள்ளனர். என் குடும்பத்துக்கு ஒரு வேண்டுகோள் விடுகிறேன். இன்று வரை நான் நலமுடன் இருக்கிறேன். இதே மாதிரி நான் நலமுடன் இருக்க இறைவனை பிரார்த்தியுங்கள் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தலிபான்கள் விடுதலை செய்யக் கோரும் பட்டியலில் ஆப்கானிஸ்தான் ஜெயிலில் இருக்கும் தலிபான் முன்னாள் இராணுவ மந்திரி முல்லா உபைதுல்லா மற்றும் 6 முக்கிய தலைவர்கள் உள்ளனர். (அ-5)

# சீனாவில் சூறாவளி ! விமானசேவைகள் ரத்து 18 மீனவர்களைக் காணவில்லை

சீனாவை சூறாவளி தாக்கியது. இதனால் 76 விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டன. மின்சாரம் துண்டிக்கப்பட்டது. கடலில் மீன் பிடிக்கச் சென்ற 18 மீனவர்களின் கதி என்ன என்று தெரியவில்லை.

**சூறாவளி தாக்கியது**

சீனாவில் கோடை காலங்களில் சூறாவளி தாக்குவது வழக்கம். அது போல், நேற்று முன்தினம் 'நியோகுரி' என்ற புதிய சூறாவளி தாக்கியது. சீனாவின் தென்பகுதியில் உள்ள ஹைனன் மாகாணத்தில் இந்த சூறாவளி தாக்கியது. இதில் பெருமளவு சேதம் ஏற்பட்டது.

**76 விமானங்கள் ரத்து**

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 76 விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டன. ஹைனன் மாகாணத்தில் வென்சங் நகரில் மின்வயர்கள் அறுந்து விழுந்தன. இதனால் அந்நகரம் முற்றிலுமாக செயலிழந்தது.

சூறாவளி தாக்குதலை அறியாமல், 3 படகுகளில் 50க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். சூறாவளியில் சிக்கி அவர்களின் படகுகள் உடைந்து கடலில் மூழ்கின. இதனால் மீனவர்களும் கடலில் விழுந்தனர். இவர்களில் 38 மீனவர்கள் நீந்திச் சென்று கடலில் உள்ள பவளப் பாறைகளில் போய் அடைக்கலம் புகுந்தனர். அந்த வழியாக சென்ற மீட்பு கப்பல், 38 பேரையும் பத்திரமாக மீட்டு கரை சேர்த்தது.

ஆனால் இந்த மீனவர்களுடன் சென்ற 18 மீனவர்களை காணவில்லை. அவர்களின் கதி என்ன என்று தெரியவில்லை. அவர்களை தேடிக் கண்டுபிடிக்கும் பணி நடந்து வருகிறது.

**ஏராளமானோர் வெளியேற்றம்**

ஹைனன் மாகாணத்தை தாக்கிய சூறாவளி, சற்று வலுவிழந்து குவாங்டோங் மாகாணம் நோக்கிநகர்ந்தது. இதையடுத்து, குவாங்டோங் மாகாணத்தில் கடலில் மீன்பிடிக்கச் சென்றிருந்த 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படகுகள் கரைக்குத் திரும்பின. தாழ்வான பகுதிகளிலும், ஆபத்தான வீடுகளிலும் வசிப்பவர்கள், பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர். உலகம் வெப்பமயமாகி வருவதுதான், இதுபோன்ற சூறாவளி மற்றும் பனிப்புயல், வெள்ளம். வரட்சி போன்றவை உருவாகக் காரணம் என்று சீன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (அ-5)

# செவ்வாய்க் கிரகத்துக்கு குரங்குகளை அனுப்பமுடிவு

செவ்வாய்க் கிரகத்திற்கு குரங்குகளை அனுப்பி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் செவ்வாய்க் கிரகத்திற்கு செல்லும் முதல் விலங்கு என்ற பெருமை குரங்குகளுக்குக் கிடைக்கவுள்ளது.

செவ்வாய்க் கிரக பயணத்திற்கு தயார் செய்வதற்காக, ரஷ்யாவின் கருங்கடல் அருகே உள்ள சோச்சி மருத்துவ கழகத்தில் 40 குரங்குகள் வளர்க்கப்பட்டு பயிற்று விக்கப்பட்டு வருகின்றன. மனிதர்களை செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்புவதற்கு முன்னோட்டமாக வே குரங் குகளை அங்கு அனுப்பிவைக்க முடிவு செய் யப்பட்டுள்ளது.

இதுகுறித்து மருத்துவக் கழகத்தின் இயக்குநர் போரிஸ் லெபின் கூறுகையில், '' மனிதர்களுக்கும், குரங்குகளுக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. எனவே நாய்கள் அல்லது பிற விலங்குகளை வைத்து பரிசோதனை நடத்துவதை விட குரங்குகளை அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்'' என்றார்.

செவ்வாய்க் கிரகத்திற்கு சென்றால் அங்கு கதர்வீச்சை சந்திக்க நேரிடும் என்பதால், அதனை மனிதர்களால் சமாளிக்க முடியுமா என்பதை அறியவே குரங்குகளை அனுப்பி சோதனை செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தக் குரங்குகளுக்கு கதிர்வீச்சு சோதனை, சிறப்பு உணவு, தனிமை, எடைக் குறைவு உள்ளிட்ட பல சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 1983 ஆம் ஆண்டு முதல் முறையாக ரஷ்யா விண்வெளிக்கு குரங்குகளை அனுப்பியது. நிதிப் பிரச்சினை காரணமாக, 1996 ஆம் ஆண்டுடன் விலங்குளை அனுப்பும் சோதனையை ரஷ்யா நிறுத்தியது. இந்த நிலையிலேயே செவ்வாய்க்குகுரங்குகளை அனுப்ப ரஷ்யா திட்டமிட்டுள்ளது. இருப்பினும் குரங்குகள் செவ்வாய்க்கு செல்ல குறைந்தது 10 ஆண்டுகளாவது ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# டென்மார்க் கல்வி

### சிறந்த கல்வி நிறுவனங்கள் -9

வடக்கு மத்திய ஐரோப்பியாவில் அமைந்துள்ள நாடு டென்மார்க். கோபன்ஹேகனை தலைநகரமாகக் கொண்ட இந்த நாட்டில் 55 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இதன் நாணயம் டேனிஸ் குரோன்.மொழி:- டேனிஸ், 7 முதல் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இங்கு கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கல்லூரிப் படிப்புகள் முற்றிலும் இலவசமாக இங்கு தரப்படுகிறது. காற்றாலைகள் அதிகம் காணப்படும் டென்மார்க்கின் தட்பவெப்பம், மக்களின் பழகும் தன்மை, இயற்கை எழில் மிகும் நகரங்களும் டென்மார்க்கின் கல்வி நிலையங்களின் தரமும் உலகறிந்தவை.

கோபன்ஹேகனின் நகர்ப்புறத் தோற்றத்தையும் கல்வி நிறுவனங்களின் தரத்தையும் கருத்தில்கொண்டு, மேல் படிப்பு பயிலும் 47 ஆயிரம் மாணவர்களில் சுமார் 4ஆயிரம் பேர் வேறு நாட்டிலிருந்து வந்து பயிலுபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### டென்மார்க்கின் கல்வி முறை

டென்மார்க்கின் கல்வி 5 பிரிவுகளாக உள்ளது.

பிரீ - ஸ்கூல் கல்வி, போல்கீஸ் கல்வி, செகண்டரி கல்வி, உயர்படிப்பு,அடல்ட் கல்வி,

### கல்லூரி படிப்பு

டென்மார்க்கில் கிட்டத்தட்ட 150 சிறப்புக் கல்வி நிறுவனங்கள் குறுகிய கால மற்றும் அதிக அவகாசம்பிடிக்கும் தொழில் படிப்புகளை வழங்குகின்றன. பல கல்லூரிகள் ஒன்றாக இணைந்த ஒரே குழுமமாகவும் கல்வி பணியாற்றுகின்றன. குறுகிய கால படிப்புகளைத் தரும் கல்லூரிகள் பிஸ்னஸ் படிப்புகளாகவும் மீடியம் சைக்கிள் கல்லூரிகள் சென்டர் பார் ஹயர் ஏஜுகேஷனல் கல்லூரிகளாகவும் வகைப்படுத்தப் பட்டுள்ளன. ஆராய்ச்சிப் படிப்புகளை இந்த உயர் கல்விக்கான மையங்களே தருகின்றன.

### பல்கலைப் படிப்பு

டென்மார்க்கில் மொத்தம் 11 பல்கலைக் கழகங்கள் உள்ளன. இவற்றுள் 5 பல்துறை சார்ந்த பல்கலைக்கழகங்கள் ஆகும். மற்ற 6 பல்கலைக்கழகங்களே இன்ஜினியரிங், கல்வியியல்,வெட்டனரி சயின்ஸ், விவசாயம், மருத்துவம் மற்றும் தொழில் நிர்வாகத்தில் தனித்தனியே சிறந்து விளங்குகின்றன.

### டென்மார்க் கல்வி மொழி

உயர் படிப்புகள் ஆங்கில மொழி வாயிலாகவே பயிற்றுவிக்கப்படுகின்றன. டேனிஸ் மொழி பெரிதும் ஆங்கில மொழியை ஒத்தது. இருந்தாலும் இதன் எழுத்து வடிவம் பயிலுவதற்கு மிகவும் கடினமானது. இதன் மொழி உச்சரிப்பும் கடினமானதாகவே இருக்கிறது.

### டென்மார்க் கல்வியின் சிறப்பு

டென்மார்க் சென்று படிப்பது டென்மார்க் இன்ஸ்டிடியூட் பார் ஸ்டடி அப்ரோட் (ஈ.ஐ.கு.) என அழைக்கப்படுகிறது. டென்மார்க் படிப்புகள் பின்வரும் காரணங்களால் சிறப்பானதாகக் கருதப்படுகின்றது.

☛ படிப்பதற்கு சவாலாக இருக்கும் இந்தப் படிப்புகள் ஆங்கிலமொழி வாயிலாகவே பயிற்றுவிக்கப்படுகின்றன.

☛ உலக வேலைவாய்ப்பு சந்தைக்குப் பொருந்தும் விதத்தில் பல்வேறு கலாசாரங்களை உள்ளடக்கிய படிப்புகளும் திறமைகளும் இங்குள்ள கல்வி நிறுவனங்களால் தரப்படுகிறது.

☛ கோபன்ஹேகன் அல்லது டென்மார்க்கின் பிற நகரங்களில் படித்தாலும் படிப்பின் தன்மையானது ஐரோப்பாவை வகுப்பறையாகக் கொண்டிருப்பதான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

☛ பல நாட்டு மாணவர்களோடு இணைந்து படிப்பதால் கலாசார ஒருங்கிணைப்பு ஏற்படுகிறது.

### கல்வி நெறிமுறைகள்

☛ டென்மார்க் சென்று கல்வி பயிலுபவர்கள் தாங்கள் சார்ந்திருக்கும் கல்வி நிறுவனத்துடன் சுமூக உறவு கொண்டிருப்பதுடன் டி.ஐ.எஸ் சின் தகவல்கள் இமெயில் மூலமாகவே அனுப்பப்படுவதால் இங்கு பயிலும் மாணவர்கள் அடிக்கடி தங்கள் இமெயில்களை சரி பார்ப்பது அவசியம்.

☛ தேர்வுகளில் லெட்டர் கிரேட், பொயிண்ட் கிரேட் முறையிலேயே மாணவர்களின் தரம் வகைப்படுத்தப்படுகிறது. 'ஏ' கிரேட் என்றால் 4 புள்ளிகளும் 'பி'க்கு 3ம் 'சி'க்கு 2 புள்ளிகளும் வழங்கப்படுகிறது. டி மற்றும் எப் தரம் பெற்றால் அவர்கள் தோல்வியடைந்ததாகக் கருதப்படுவர்.

☛ வகுப்புகளுக்குச் செல்வது கட்டாயமாகக் கருதப்படுகிறது. அட்டென்ஸ் அவசியமானதால் வகுப்புகள், பீல்ட் ஸ்டடி மற்றும் கல்விச் சுற்றுலாக்களைத் தவிர்க்க முடியாது. முழு அட்டென்சன்ஸ் இல்லாத மாணவர்கள் அந்தப் படிப்புகளிலிருந்து விலக்கப்பட்டு விடுகிறார்கள். இது தவிர வருகைக்கான புள்ளிகளின் அடிப்படையிலேயே இறுதித் தரம் வழங்கப் படுகிறது.

☛ படிக்கும் காலத்தில் நேர்மையும் நல்லொழுக்கத்தையும் கடைப்பிடிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தேர்வின் போது எழுதுவது போன்ற எமது நாட்டு நடைமுறைகளை நினைத்தே பார்க்க முடியாது.

☛ ஒருவரின் நடத்தையில் பிரச்சினை ஏற்பட்டாலோ, குறிப்பிட்ட நேரத்தில் பாடம் சம்பந்தப்பட்ட அம்சங்களை செய்யத் தவறினாலோ அம்மாணவரை எந்த முன்னறிவிப்பும் இன்றி தோல்வியுற்றதாக அறிவித்து வெளியேற்றி விடுவார்கள்.

☛ டென்மார்க்கில் படிப்பது முற்றிலும் டி.ஐ.எஸ்ஸின் வசதிகளுக்கு உட்பட்டது. எனவே இங்கு படிக்கும் முறை, தேர்ச்சி முறை, பழகும் முறை, வாழும் முறை என அனைத்தும் குறிப்பிட்ட விதத்தில் மட்டுமே இருக்கவேண்டும். இவற்றில் ஏதாவது பிரச்சினை ஏற்படும்போது டி.ஐ.எஸ். மாணவருக்கு எச்சரிக்கைக் கடிதத்தைத் தருகிறது.





இதே மாதிரியான பிரச்சினை எழும் பட்சத்தில் அம்மாணவரை உடனடியாகக் கல்வி நிறுவனத்திலிருந்து விலக்குவதுடன் எந்த விதமான சலுகைகளும் தராமல் அவரை அவர் நாட்டிற்கே திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளும் எடுக்கப் படுகிறது.

☛ முதல் செமஸ்டரில் குறைந்த பட்சம் 20 புள்ளிகள் கிரேட். பெற்றவரே 2 ஆவது செமஸ்டர் தேர்வை எழுத அனுமதிக்கப்படுகிறார்கள்.

### டென்மார்க்கின் புகழ்பெற்ற நிறுவனங்களைக் காண்போமா?

**கோபன்ஹேகன் பல்கலைக்கழகம்:** டென்மார்க்கின் தலைநகரான கோபன்ஹேகனில் அமைந்துள்ள இந்தப் பல்கலைக்கழகம் 1479 இல் தொடங்கப்பட்டது. கோபன்ஹேகனில் 3 இடங்களில் இதன் மையங்கள் உள்ளன. பெரும்பாலும் டேனிஸ் மொழியில் பல பிரிவுகளில் வகுப்புகள் நடத்தப்பட்டாலும் வெளிநாட்டிலிருந்துவந்து பயிலும் மாணவர்களுக்கென்றே பிரத்தியேக பாடப்பிரிவுகள் ஆங்கிலமொழி வாயிலாகவே நடத்தப்படுகின்றன.



இதற்கான இன்டர்நெட் தளம் www.ku.dk/english/ ஆகும்.

### பாடப் பிரிவுகள்

ஐரோப்பிய மற்றும் ஸ்காண்டிநேவிய படிப்புகள், சமூக அறிவியல், பொருளாதாரம், இறையியல் மற்றும் உளவியல், வரலாறு, சமூகவியல், காதல் இலக்கியம், மொழியியல்,கணிதம், மண்ணியல்; இயற்பியல், வேதியல் மற்றும் பயோகெமிஸ்ட்ரி, உயிரியல் ,மனிதவியல்.

இங்கு சேர தகுதி புள்ளிகள் அடிப்படைப் படிப்பில் பொயிண்ட் கிரேட் அளவில் 3.0 பெற்றிருக்க வேண்டும் இந்தப் பல்கலைக்கழக வளாகத்திலேயே தங்கும் வசதி உள்ளது. கோபன்ஹேகன் நகரில் வெளியிடங்களில் தங்கியிருந்தும் படிக்கலாம்.

இங்கு 2 வகையான கல்வியாண்டு பிரிக்கப் படுகிறது. செப்ரம்பர் முதல் டிசம்பர் வரையிலான படிப்புகள் பெப்பரவரி முதல் ஜூன் வரையிலான பாடத்திட்டங்களும் உள்ளன. செப்ரம்பரில் பயில விரும்பினால் மார்ச் முதலாம் திகதிக்குள் பெப்ரவரியில் பயில விரும்புபவர்கள் செப்டெம்பர் 15 இற்குள்ளும் விண்ணப்பிக்க வேண்டும்.

கோடை வகுப்புகளில் படிக்க விரும்புபவர்களில் ஏப்ரல் 15 இற்குள்ளும் முழு ஆண்டு படிப்பு படிக்க விரும்புபவர்கள் மே 15 க்குள்ளும் விண்ணப்பிக்க வேண்டும். நாம் படிக்க விரும்பும் கல்வி நிறுவனத்திடமிருந்து விண்ணப்பம் பெற நாம் முதலில் ஒரு விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

விண்ணப்பம் மற்றும் சேர்க்கைக்கான தகவல்களைப் பெற www.dis@umn.edu என்றதளத்தைப் பார்க்க வேண்டும்.

**சதர்ன் டென்மார்க் பல்கலைக்கழகம்:** ஒடின்ஸ் பல்கலைக்கழகம், சதர்ன் டென்மார்க் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் அண்ட் இன்ஜினியரிங், சவுச் ஜட்லண்ட் யுனிவர்சிடி ஆகிய 3 பல்கலைக் கழகங்களையும் இணைத்து இந்த பல்கலைக்கழகம் 1998இல் உருவாக்கப்பட்டது. இந்த பல்கலைக்கழகத்தில் 1600 ஆசிரியர்கள் பணிபுரிவதுடன் 20 ஆயிரம் மாணவர்கள் பயி லுகிறார்கள். இது டென்மார்க்கின் 3 வது பெரிய பல்கலைக்கழகமாகும். ஒடின்ஸ், சோல்டிங், எஸ்பேர்க், சோன்டர்போர்க் என்ற 5 இடங்களில் இதன் வளாகங்கள் உள்ளன. இதன் இன்டர் நெட் முகவரி www.stu.dk

### இதில் தரப்படும் பாடப்பிரிவுகள்

ஐரோப்பிய மற்றும் பன்னாட்டுப் படிப்புகள், சமூக அறிவியல் மற்றும் சட்டம், சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் , நிர்வாகவியல்மற்றும் மார்க்கெற்றிங் ,அமெரிக்க மற்றும் பிரிட்டன் படிப்புகள், மொழியியல், வரலாறு, தொடர்பாடல், கணிதம் மற்றும் புள்ளியியல், இயற்பியல், வேதியியல், மரைன் பயாலஜி; இன்ஜினியரிங்/டெக்னாலஜி.

இங்கு சேர தகுதி புள்ளிகள் அடிப்படைப் படிப்பில் பொயிண்ட் கிரேட் அளவில் 3.0 பெற்றிருக்க வேண்டும். செப்ரம்பர் முதல் டிசம்பர் வரையிலான படிப்புகள் பெப்ரவரி முதல் ஜுன் வரையிலான பாடத் திட்டங்களும் உள்ளன. செப்ரம்பரில் பயில விரும்பினால் மார்ச் 1க்குள்ளும் பெப்ரவரியில் பயில விரும்புபவர்கள் செப்ரம்பர் 15க்குள்ளும் விண்ணப்பிக்க வேண்டும்.

**ஒல்போர்க் பல்கலைக்கழகம்:** வடக்குஜட்லண்ட் பகுதியில் அமைந்துள்ள ஓல்போர்க் பல்கலைக்கழகத்தை சுற்றிலும் மியூசியங்களும் , கடைகளும் , நட்புணர்வு கொண்ட கபேக்களும் உள்ளன. வைகிங்குகளின் மிகப் பெரிய அழிவைக் குறிக்கும் ஸ்கண்டிநேவிய இடங்களும் இதற்கருகில் உள்ளன. இது 1974இல் தொடங்கப்பட்டது. இங்கு 13ஆயிரம் மாண வர்கள் பயிலுகிறார்கள். அறிவியல் மற்றும் இன்ஜினியரிங் துறைகளில் இப் பல்கலைக்கழகம் சிறந்து விளங்குகிறது. இதன் இன்டர்நெட் முகவரி www.acu.dk

**R.U. பாலமுருகன்**

**பாடப்பிரிவுகள்:** இன்ஜினியரிங், உளவியல், கலாசாரம் மற்றும் மீடியா படிப்புகள், உலக மற்றும் கலாசாரப் படிப்புகள். இங்கு சேர தகுதி புள்ளிகள் அடிப்படைப் படிப்பில் பொயின்ட் கிரேட் அளவில் 3.0 பெற்றிருக்க வேண்டும். செப்ரம்பர் முதல் டிசம்பர் வரையிலான படிப்புகள் பெப்ரவரி முதல் ஜுன் வரையிலான பாடத் திட்டங்களும் உள்ளன. செப்ரம்பரில் பயில விரும்பினால் மார்ச் 1 இற்குள்ளும் பெப்ரவரியில் பயில விரும்புபவர்கள் செப்ரம்பர் 15க்குள்ளும் விண்ணப்பிக்க வேண்டும்.

# இந்தியாவில் பயோ இன்போர்மேரெக் பயில உள்ள வாய்ப்புகள்

கணிதம், வேதியியல், உயிர் வேதியியல், இன்போர்மேரெக், ஸ்டடிஸ்டிக்ஸ், கொம்பியூட்டர் சயின்ஸ், ஆர்டிபிஷியல் இன்டலிஜென்ஸ் தொடர்பான தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி மூலக்கூறு அளவிலான நுண்ணிய உயிரியல் பிரச்சினைகளுக்கு பயோ இன்போர்மேரெக் வல்லுநர்கள் தீர்வு காண்கின்றனர்.

கம்ப்யூடேஷனல் பயாலஜி ஆய்வுகள், சிஸ்டம் பயாலஜியிலும் உதவும். சீக்வன்ஸ் அலைன்மென்ட், ஜீன் பைன்டிங், ஜீனோம் அசெம்ப்ளி, புரோட்டீன் ஸ்டிரக்சர் அலைன்மென்ட்,புரோட்டீன் ஸ்டிரக்சர் பிரடிக்ஷன், ஜீன் எக்ஸ்பிரஷன் பிரடிக்ஷன்,புரோட்டீன் - புரோட்டீன் இன்டராக்ஷன்,மாடலிங் ஆப் எவல்யூஷன் போன்ற பிரிவுகளில் இந்தத் துறையில் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. ஆயிரக் கணக்கான இழைகள் ஒன்றாக இணைவதால் ஒரு உயிரினத்தின் ஜீனோம் உருவாகிறது.



இதை சீக்வன்ஸ் அசெம்ப்ளி என்கின்றனர். கொம்ப்யூட்டர் உதவியுடன் பயோ இன்போர்மேரெக் வல்லுநர்கள் இதில் ஆய்வு மேற்கொள்கின்றனர்.ஒரு ஜீனோம் இழையின் டி.என்.ஏ., வரிசையைக் கண்டறிந்து, அந்த ஜீனின் பணி என்ன என்பதை ஆராய்வதே ஜீன் அனாலிசிஸ்.

தேர்ந்தெடுத்த ஜீன்களை முன்பே அறியப்பட்ட ஜீன்களுடன் ஒப்பிடுகின்றனர். இதன் மூலமாக நோய் உருவாவதில் அந்த ஜீனின் பங்கு குறித்த தகவல்களை தேடுகின்றனர். இதற்கு திறன்வாய்ந்த கொம்ப்யூட்டர்கள், பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட சாப்ட்வேர்களை பயன்படுத்துகின்றனர்.பயேதி 'இன்போர்மேரெக்' ஆய்வுகளில் மிக முக்கியமானதாக இதைக் கருதுகின்றனர்.

ஜீனோமின் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் தேர்ந்தெடுத்து ஆய்வு செய்கிறது புரோட்டோமிக்ஸ். இதில் ஏற்படும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அதற்கேற்ற மருந்துகளை ஜீன் தெரபியை உருவாக்க இது உதவுகிறது.

தகவல் தொழில்நுட்பம், மாலிக்கியுலர் பயாலஜி ஆய்வுகளில் உதவுகிறது. இந்தத் துறையில் வேலைவாய்ப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

பயோடெக்னாலஜி,பயோமெடிக்கல் சயின்ஸ், பார்மசூட்டிக்கல் போன்ற துறைகளில் ஈடுபட்டிருக்கும் ஆய்வு நிறுவனங்களில் தொழிற்சாலைகள், ஆஸ்பத்திரிகளில் வேலைவாய்ப்புகள்உள்ளன.

பார்மகோலஜிஸ்ட் கிளினிக்கல் பார்மகோலஜிஸ்ட், இன்போர்மேரெக் டெவலப்பர்,கொம்ப் யூட்டேஷனல் கெமிஸ்ட், பயோ அனாலிடிக்ஸ், அனாலிடிக்ஸ் போன்ற பொறுப்புகளில் பணியாற்றலாம். எம். எஸ்.சி., பயோ இன்பர்போர்மேரெக் வழங்கும் சென்னை கல்லூரிகளில் சில,

1. ஆல்பா கலை அறிவியல் கல்லூரி, போரூர், சென்னை.
2. ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, கேளம்பாக்கம் சென்னை.
3. ஜெயா கலை அறிவியல் கல்லூரி, திரு நின்றவூர்,சென்னை.
4. முகமது சதக்கலை அறிவியல் கல்லூரி, சோழிங்க நல்லூர்,சென்னை
5. தனபாலன் பெண்கள் கல்லூரி, கேளம் பாக்கம்,சென்னை.
6. வேல் ஸ்ரீ ரங்கா கலை அறிவியல் கல்லூரி, ஆவடி, சென்னை.
7. வேல் அறிவியல் கல்லூரி, பழைய பல்லாவரம் ,சென்னை.
8. டாக்டர் எம்.ஜி.ஆர்.ஜானகி பெண்கள் கலை அறிவியல் கல்லூரி,சென்னை.
9. குருநானக் கல்லூரி, வேளச்சேரி,சென்னை.
10. ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி, சென்னை.

எஸ்.ஆர்.எம். , வி.ஐ.டி போன்ற பல்கலைக் கழகங்களிலும் பயோ இன்போர்மேரெக் முதுகலைப் படிப்பாக வழங்கப்படுகிறது.

இந்தப் படிப்பை வழங்கும் இந்தியாவின் முன்னணி நிறுவனங்கள்:

1.இன்ஸ்டிடியூட் ஆப் பயோ இன்போர்மேரெக் அண்டு அப்ளைடு பயோடெக்னாலஜி. பெங்களூர்.

2.இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி,டெல்லி (பயோகெமிக்கல் இன்ஜினியரிங் அண்டு பயோடெக்னாலஜி).

ஐ.ஐ.டி. காரக்பூரிலும் இது தொடர்பான கோர்சுகள் உள்ளன. ஐ.ஐ.டி., ஜே.ஈ.ஈ. தேர்வில் வெற்றிபெறவேண்டும்.

3.பயோ இன்போர்மேரெக் சென்டர், ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம் (அட்வான்ஸ் கிராஜுவேட் டிப்ளோமா இன் பயோ இன்போர் மேரெக்)

4. மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் (இந்தியாவில் முதன் முறையாக பயோ இன் போர்மேரெக் படிப்பை அறிமுகம் செய்தது.




5. புனே பல்கலைக்கழகம், மகாராஷ்டிரா (அட்வான்ஸ்ட் டிப்ளோமா இன் பயோ இன்போர் மேரெக்).

6. பயோ இன்போர்மேரெக் இன்ஸ்டிடியூட் இந்தியா, நொய்டா (பயோ இன்போர்மேரெக், பயோ மெடிக்கல் இன்போர்மேரெக், கிளினிக்கல் டிரையல், கிளினிக்கல் ரிசர்ச், பார்மசி ரெகுலேட்டரி அபயர்ஸ், பயோடெக்னாலஜி போன்ற பிரிவுகளில் ஒரு வருட படிப்புகளை வழங்குகிறது. இதுதவிர, பல்வேறு ஆன்லைன் படிப்புகளை வழங்குகிறது. விபரங்களுக்கு www.biionline.org. என்றவெப்சைட்டைப் பார்க்கவும்.

7.மார் அதனாசியஸ் காலேஜ். ஆப் அட்வான்ஸ் ஸ்டடீஸ் கேரளா, பயோடெக்னாலஜி அல்லது ஹாஸ்பிட்டல் அண்டு ஹெல்த் கேர் மேனேஸ்மென்ட்டில் எம்.பி.ஏவும் படிக்கலாம். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் எம்.எஸ்.சி.யில் மைக்ரோபியல் ஜீன் டெக்னாலஜி மற்றும் பயோ மெடிக்கல் ஜெனிடிக்ஸ் படிப்புகள் வழங்கப்படுகின்றன.

பி.எஸ்.சி.,பயோ இன்போர்மேரெக் முடித்தவுடன் கீழ்க்கண்ட கோர்ஸ்களையும் படிக்கலாம். எம்.எஸ்.சி. மெடிக்கல் மைக்ரோ பயாலஜி- சென்னை பல்கலைக்கழகம் எம்.எஸ்.சி., ஜீனோமிக்ஸ் - மதுரை காமராஜர் பல்கலைக் கழகம். எம்.எஸ்.சி.,மெடிக்கல்வேப்டெக்னாலஜி- ராமச்சந்திரா மருத்துவ பல்கலைக்கழகம் எம்.எஸ்.சி. கிளினிக்கல் ரிசர்ச்.

# ஐந்தாவது ஒருநாள் போட்டியிலும் பங்களாதேஷ் தோல்வி
# தொடரை முழுமையாக சுவீகரித்தது பாகிஸ்தான் அணி

(கராச்சி)

ஐந்தாவது ஒருநாள் போட்டியிலும் பாகிஸ்தான் அணி 150 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரை முழுமையாக கைப்பற்றியது.

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட பங்களாதேஷ் அணி ஐந்து ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரு இருபது -20 போட்டி கொண்ட தொடரில் விளையாடியது.

இதில் முதல் நான்கு ஒருநாள் போட்டிகளிலும் வெற்றி பெற்ற பாகிஸ்தான், தொடரை 4:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இத் தொடரின் ஐந்தாவதும் இறுதியானதுமான போட்டி நேற்று முன்தினம் கராச்சியில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி சல்மான் பட்டின் சிறப்பான சதத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 50



பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பிடமிருந்து; தொடரின் கிண்ணத்தை அணித்தலைவர் மலிக் பெற்றுக் கொள்வதைக் காணலாம்.

ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 329 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சல்மான் பட் சிறப்பாக துடுப்பெடுத்தாடி இத் தொடரின் இரண்டாவது சதமாக 124 பந்துகளில் (14 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 136 ஓட்டங்களையும் யுனிஸ்கான் 69 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மோட்டார்ஷா 4 விக்கெட்டுக்களையும் ஹுசைன் 3, அப்துல் ரஸாக் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 330 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி ஆஸிப், அப்ரிடியின் சிறப்பான பந்துவீச்சில் 40.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 179 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 150 ஓட்டங்கள்ால் தோல்வி அடைந்தது.

இவ் வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை பாகிஸ்தான் அணி 5:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

துடுப்பாட்டத்தில் மஹமுல்லா 37 ஓட்டங்களையும் அப்துல் ரஸாக் 33, அணித்தலைவர் மொகமட் அஸ்ரப் புல் 30 மற்றும் ஹோசல் 29 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மொகமட் ஆஸிப், சைட் அப்ரிடி ஆகியோர் த்லா 3 விக்கெட்டுக்களையும் உமல் குல், ரிஷா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் நாயகனாக மொகமட் ஆஸிப் தெரிவானதுடன் தொடரின் நாயகனாக பாகிஸ்தான் அணி தொடர் வெற்றிக்கு வழிசமைத்த சல்மான் பட் தெரிவானார்.

சல்மான் பட் இத் தொடரின் ஐந்து போட்டிகளிலும் மொத்தமாக 2 சதங்கள் உட்பட 451 ஓட்டங்களை எடுத்து ஒருநாள் தொடரில் அதிக ஓட்டங்களை குவித்த பாகிஸ்தான் வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

(5)

## ஐ.பி.எல். இருபது - 20 தொடர்

# மைக்கெல் ஹசி அதிரடி சதம்; சென்னை சுப்பர் கிங்ஸ் வெற்றி

(சென்னை)

மைக்கெல் ஹசியின் அதிரடியான சதத்தின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் 33 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்தியக் கிரிக்கெட் சபையினால் ஆரம்பிக்கப்பட்ட இந்திய பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது -20 தொடர் நடைபெற்று வருகிறது.

இத்தொடரில் சர்வதேச பிரபலங்கள் மற்றும் இந்திய உள்ளூர் அணி வீரர்கள் அடங்கிய எட்டு அணிகள் மோதுகின்றன.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது முதல் சுற்றுப்போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் - கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ், ஹசியின் அதிரடியான சதத்தின் மூலம் இருபது ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 240



மைக்கெல் ஹசி

ஓட்டங்களை எடுத்தது.

இதில் மைக்கெல் ஹசி ஆட்டமிழக்காமல் 54 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு (8 பவுண்டரிகள், 9 சிக்ஸர்கள் உட்பட) 116 ஓட்டங்களையும் ரெயினா 32, பத்திரிநாத் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அணித் தலைவர் தோனி 2 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் பதான் 2 விக்கெட்டுக்களையும் பிரட் லீ, ஹோப்ஸ் மற்றும் மோட்டா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு இருபது ஓவர்களில் 241 ஓட்டங்கள் என்ற பிரமாண்டமான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி இருபது ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 33 ஒட்டங்களால் தோல்வி அடைந்தது.

இதில் ஹோப்ஸ் 33 பந்துகளில் (10 பவுண்டரிகள் 3 சிக்ஸர்கள் உட்பட) 71 ஓட்டங்களையும் குமார் சங்கக்கார (5 பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் உட்பட) 54 ஓட்டங்களையும் அணித்தலைவர் யுவராஜ் சிங் 23ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சென்னை சுப்பர் கிங்ஸ் சார்பில் ஹோனி, முரளிதரன், அமர்நாத் மற்றும் ஜோகிந்தர் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக மைக்கெல் ஹசி தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸிற்கு 2 புள்ளிகள் கிடைக்கப் பெற்றன.

(5)




# டில்லி டேர் டேவில்ஸ் வெற்றி

(புதுடில்லி)

3-வது லீக் போட்டியில் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணி எளிதாக வெற்றி பெற்றது. ஐ.பி.எல். இருபது -20 தொடரின் மூன்றாவது ஆட்டம் டில்லி பெரோஸ்ஷா கோட்லா மைதானத்தில் நடந்தது.

இதில் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் ஷேன்வோன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் சந்தித்தனர்.

நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் றேயல்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

மக்ராத், பாட்டியா, மகரூப் ஆகியோரின் கட்டுக்கோப்பான பந்துவீச்சால் 20 ஓவர்கள் நிறைவில் ராஜஸ்தான் அணி 8 விக்கெட் இழப்புக்கு 129 ஓட்டங்களை எடுத்தது.

அதிக பட்சமாக ரவீந்திர ஜடேஜா 29 ஓட்டங்களும் சுலுன்கே 26 ஓட்டங்களும், ஷேன் வாட்சன் 21 ஓட்டங்களும் எடுத்தனர்.

டில்லி அணி சார்பில் மகரூப், பாட்டியா தலா 2 விக்கெட்டுக்களும் விக்டோரி, மக்ராத் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அடுத்து ஆடிய டில்லி அணி சேவாக் (12 ஓட்டங்கள்) விக்கெட்டை வேகமாக இழந்தாலும் கெளதம் காம்பீர், தவான் ஆகியோர் பொறுப்பாக விளையாடி அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

டில்லி அணி 15.1 ஓவரில ஒரு விக்கெட் இழப்புக்கு 132 ஓட்டங்கள் எடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் காம்பீர் 58 ஓட்டங்களுடனும் (46 பந்து, 7 பவுண்டரி, ஒரு சிக்ஸர்) தவான் 52 ஓட்டங்களுடனும் (41பந்து 8 பவுண்டரி) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (5)

## கிரிக்கெற்றில் முதல் முறையாக இளஞ்சிவப்பு நிறப்பந்து

(லோட்ஸ்)

மெரில்போர்ன் கிரிக்கெற் கழக அணிக்கும் ஸ்கொட்லாந்து அணிக்கும் இடையில்இன்று லோட்ஸில் நடைபெறவுள்ள ஒரு நாள் போட்டியில் முதல் முறையாக இளஞ் சிவப்புநிறப் பந்து பயன்படுத்தப்படவுள்ளது.

பரிசோதனை முயற்சியாக பயன்படுத்தப்படும் இளஞ்சிவப்பு நிறபந்து வெற்றி அளித்தால் 2009ஆம் ஆண்டு அளவில் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் வெள்ளைநிற பந்துக்கு பதிலாக உபயோகப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக மெரில்போர்ன் கிரிக்கெற் கழகம் அறிவித்துள்ளது.

மெரில்போர்ன் கிரிக்கெற் கழகம் கிரிக்கெற் சட்ட விதிகளை நிர்ணயிக்கும் அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

(5)

# ஐ.பி.எல்லில் விளையாட அனுமதி மறுப்பு; இங்கிலாந்து அணி வீரர்கள் போர்க்கொடி

ஐ.பி.எல்.போட்டியில் அனைத்து நாட்டு வீரர்களும் பங்கேற்றுள்ளனர். ஆனால் இங்கிலாந்து அணியில் உள்ள வீரர்களை பங்கேற்க இங்கிலாந்து கிரிக்கெற்சபை அனுமதிக்க மறுத்துவிட்டது.

இதனால் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கவில்லை. இது இங்கிலாந்து வீரர்களை ஆத்திரப்படுத்தியுள்ளது. ஏற்கனவே இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோகன் இங்கிலாந்து வீரர்களையும் அனுமதித்து இருக்கலாம் என்று கருத்துத் தெரிவித்திருந்தார். இப்போது முன்னணி வீரர்கள் கொலிங்வூட், பீட்டர்சன் ஆகியோரும் இங்கிலாந்து வீரர்களுக்கு ஆதரவாக, கருத்து தெரிவித்துள்ளனர். கொலிங்வூட் கூறியதாவது,

இங்கிலாந்து வீரர்கள் அனைவருமே ஐ.பி.எல்.போட்டியில் ஆட முடியாமல் போய்விட்டதே என்ற ஏக்கம் உள்ளது. சாதாரணமாக சம்பாதிக்கும் பணத்தைவிட 6 வாரத்தில் 4 மடங்கு சம்பாதிக்கும் வாய்ப்பு இருந்தது. அதை இழந்துவிட்டோமே என்ற கவலை அனைவருக்கும் உள்ளது. வீரர்களிடம் நீங்கள் ஐ.பி.எல்.போட்டியில் ஆடுகிறீர்களா இங்கிலாந்துக்காக ஆடப் போகிறீர்களா என்று கேட்டு அவர்களது முடிபுக்கு விட்டிருக்க வேண்டும். வீரர்கள் எது தேவையோ அது பற்றி முடிபு எடுத்திருப்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

பீட்டர்சன் கூறியதாவது, இருபது-20 மிகப் பிரபலமாகி வருகிறது. இந்த நேரத்தில் ஐ.பி.எல்.போட்டியில் நாமும் பங்கேற்று இருந்தால் எல்லா வீரர்களுக்கும் நல்ல அனுபவம் கிடைத்திருக்கும். அதை இழந்து விட்டோம்.

லொத்தர் பரிசு போல மிக அதிகமான பணம் வீரர்களுக்கு கிடைக்க இருந்தது. ஆனால் அதையும் கிடைக்க விடாமல் செய்து விட்டனர். வீரர்களுக்கு மற்ற போட்டிகளிலும் பங்கேற்க உரிமை உள்ளது. பணம் சம்பாதிக்க வழி இருந்தால் அதற்கான வாய்ப்பை பயன்படுத்தி கொள்வதில் எந்த தவறும் இல்லை. கிரிக்கெற் என்பது குறிப்பிட்ட காலம் வரைதான் ஆட முடியும். அந்நேரத்தில் மட்டும்தான் சம்பாதிக்க முடியும் அந்த வாய்ப்பை பெற முடியாமல் தடுத்தது சரி அல்ல. எல்லா நாட்டு வீரர்களும் ஆடும்போது நம் மட்டும் ஆடவில்லையே என்பது வேதனையாகவுள்ளது. அடுத்த தடவை நடைபெறும் போட்டியிலாவது எங்களை அனுமதிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

(5)

கத்தி சாணைக் கல்லை தின்கிறது. சாணைக் கல் கத்தியைத் தின்கிறது.

—ஆபிரிக்கா

வலம்புரி

## ஜே.வி.பிக்குள் ஏற்பட்ட உடைவால் இலங்கைக்கு விமோசனம் கிடைக்குமா?

ஜே.வி.பிக்குள் ஏற்பட்ட பிளவுக்குக் காரணம் அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள் சிலரே என அந்தக் கட்சி வெளிப்படையாகக் கூறியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுடன் உடன்படிக்கை செய்துகொண்ட ஜே.வி.பி இவ்வளவு விரைவாக உடைந்து போகுமென எவரும் எதிர்பார்க்கவில்லையாயினும், தற்போதைய அரசின் இராஜதந்திர வியூகம், விமல் வீரவன்சவை மையமாக வைத்து ஜே.வி.பியை பலவீனப்படுத்தி விட்டது.

உண்மையில், இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கிடைத்த மகத்தான வெற்றி என்றே கூறவேண்டும்.

அதேநேரம் ஊரையும், உறவையும் கெடுத்து நாட்டில் யுத்தம் நீடிக்க வேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாக இருந்த ஜே.வி.பி தனக்கு வரக்கூடிய ஆபத்தை அறியாமல் இருந்தமை துரதிர்ஷ்டமானதே.

தன்னைப் பற்றி, தனது குடும்பத்தைப் பற்றி இம்மியும் சிந்திக்காமல் ஊரைக் குழப்பி இன்பம் காண விளைவோர் தானும் அழிந்து தன் குடும்பத்தையும் நடுவீதியில் இறக்கி விடுகின்றனர். இதுவே ஜே.வி.பியின் விடயத்திலும் நடந்து விட்டது.

பரவாயில்லை, ஜே.வி.பி போன்ற இனவாதக் கட்சிகள் உடைந்து போவது நல்லதே. கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் யோகம் என்பது சோதிடத்திற்கு மட்டும் உரியதல்ல. மாறாக அது அரசியலுக்கும் பொருந்தும் என்பதே ஜே.வி.பிக்கு நேர்ந்த கதி சுட்டி நிற்கிறது.

எதுவாயினும் ஜே.வி.பிக்குள் ஏற்பட்ட பிளவு காரணமாக இனப்பிரச்சினை தீரக் கூடிய வாய்ப்பு இருப்பதாக ஜெகான் பெரேரா எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அவர் தான் கூறிய கருத்துக்கு ஆதாரமாக கொழும்பில் இருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டபோது ஜே.வி.பியின் விமல் வீரவன்ச தவிர ஏனையவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் நாடாளுமன்றத்தில் அது தொடர்பில் கண்டன அறிக்கை ஜே.வி.பியால் வாசிக்கப்பட்டதாகவும் கூறும் ஜெகான் பெரேரா, உண்மையில் கொழும்பில் இருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டதற்கு எதிராக ஜே.வி.பியின் கண்டன அறிக்கையை அதன் பிரசார செயலாளர் விமல் வீரவன்சவே நாடாளுமன்றத்தில் வாசித்திருக்க வேண்டும்.

ஆனால் அதனை வாசிக்க விமல் வீரவன்ச மறுத்து விட்டதாகவும், அவரைப் பொறுத்தவரை கொழும்பில் இருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டமை நியாயமானதென்ற நிலைப்பாட்டை கொண்டிருந்தார் எனவும் ஜெகான் பெரேரா கூறியுள்ளார்.

ஜெகான் பெரேரா கூறிய கருத்தின் அடிப்படையிலும் விமல்வீரவன்ச மீது ஜே.வி.பி எடுத்த நடவடிக்கையின் அடிப்படையிலும் எதிர்கால ஜே.வி.பி என்பது பல் பிடுங்கப்பட்ட பாம்பின் நிலையாகவே இருக்கும் என்பதால் அது கக்கி வீசும் இனவாத விஷம் வீரியம் குறைந்ததாகவே இருக்கும்.

இருப்பினும் ஜே.வி.பியின் அஸ்தமனத்தால் மட்டும் இனப்பிரச்சினை தீரும் என்ற கருத்தியல் பொருத்துடையதல்ல. இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற நினைப்பும் சிந்தனையும் அரசிடம் முதலில் ஏற்படவேண்டும்.

அப்போதுதான் இலங்கையில் அமைதியும் சமாதானமும் ஏற்படும். ஆக, ஜே.வி.பியின் உடைவு –பிளவு என்பது பல நோய்க் கிருமிகளில் வலுவான ஒரு கிருமியின் அழிவாக மட்டுமே ஆறுதல் அடைய முடியும்.

# புதிய சுயாதீன நிபுணர்கள் குழுவினை நியமிப்பது குறித்து அரசாங்கம் தீர்மானிக்கவில்லை

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற 16 மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வரும்



ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகளை கண்காணிப்பதற்கான புதிய சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவினை நியமிப்பது குறித்து அரசாங்கம் இதுவரை தீர்மானிக்கவில்லை என மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

'எமது அடுத்தகட்ட நகர்வு குறித்து கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழு எனும் கொள்கையானது இலங்கை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டதாகும். அதேநேரம் நாம் புதிய குழுவொன்றின் மூலம் சுயாதீன நிபுணர்கள் குழுவை மீளமைப்பது பற்றி இதுவரை தீர்மானிக்கவில்லை' எனவும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித் துள்ளார்.

மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு நிமியக்கப்பட்ட சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழு கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தவுள்ளது.

விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் திருப்தியளிக்கவில்லை யெனவும் வரையறுக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதெனவும் கூறி சுயாதீன நிபுணர்கள் குழு அண்மையில் தமது பணிகளை இடைநிறுத்திக்கொண்டு நாட்டைவிட்டு வெளியேறியிருந்தது.

இந்த நிலையில் கடந்தவாரம் இறுதி அறிக்கையை வெளியிட்டிருந்த சுயாதீன நிபுணர்கள் குழுத மனித உரிமை மீறல்கள் குறித்து உரிய விசாரணைகளை முன்னெடுக்க அரசாங்கம் தவறி விட்டதாகக் குற்றஞ்சாட்டியிருந்தது.

இதனைத் தொடர்ந்து அடுத்தவாரம் இலங்கை வரவிருக்கும் இந்தியாவின் முன்னாள் நீதிபதி பி.என்.பகவதி தலைமையிலான சுயாதீன நிபுணர்கள் குழுவினர் தமது செயற்பாடுகள் குறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கவுள்ளனர். உண்மையைத் தேடும் போது அரசியல் ரீதியான ஒத்துழைப்பு மிகவும் குறைவாக இருந்ததைக் காணக் கூடியதாக இருந்ததாக சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்தது. (அ-5)

# அக்ஷன் பெய்ம் நிறுவனம் வெளியேறத் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் பணிகளை இடைநிறுத்திக்கொண்டு வெளியேறுவதற்கு அக்ஷன் பெய்ம் நிறுவனம் தீர்மானித் துள்ளது. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளைக் கண்காணிக்கும் பணிகளிலிருந்து சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழு விலகியதன் பின்னணி யிலேயே தமது பணிகளை இடை நிறுத்த அக்ஷன் பெய்ம் நிறுவனம் தீர்மானித் துள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு மூதூ ரில் அக்ஷன் பெய்ம் நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் கொல்லப்பட்டி ருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

ஊர்காவற்படை வீரர் ஒருவரும், இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸார் இணைந்தே இந்தப் படுகொலையை மேற்கொண்டிருந்ததாக மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள்குழு அண்மையில் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது. (அ-5)

# இலங்கைக்கு எதிரான தீர்மானம் கைவிடப்பட்டது?

இவ்வாரம் தென் ஆபிரிக்காவில் நடை பெறவிருக்கும் பாராளுமன்றங்களுக்கு இடையிலான சங்கத்தின் 118வது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படவிருந்த தீர்மானம், இலங்கை பாராளுமன்ற பிரதிநிதிகளின் தலையீட்டைத் தொடர்ந்து கைவிடப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

தீர்மானவரைவில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயத்தை அறிந்தவுடன், இலங்கைப்பாராளுமன்றப் பிரதிநிதிகள் தென்னாபிரிக்க பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இலங்கை இராணுவம் ஒரு பொழுதும் பொதுமக்களை இலக்குவைப்பதில்லை என்றும் பதிலாக பயங்கரவாதிகளையே தாக்குவதாகவும்பிரிவினை கோரும் பயங்கரவாதிகள் தான் தற்கொலைக்குண்டுத் தாக்குதல்கள் மூலம் வேறுபாடில்லாமல் பொதுமக்களைத் தாக்குவதாகவும் தென்னாபிரிக்க பிரதிநிதிகளிடம் இலங்கைப் பிரதிநிதிகள் வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-5)

# தமிழ் மக்களின் கைதுகள் தொடர்பாக ஜனாதிபதியைச் சந்திக்கத் தீர்மானம்

## மலையக மக்கள் முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் தமிழ் மக்கள் கடத்தப்படுதல், காணாமல்போதல் மற்றும் உத்தியோகப்பற்றற்ற வகையில் கைது செய்யப்படுதல் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அடுத்த வாரம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மலையக மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரனின் 51ஆவது பிறந்ததினம் கடந்த 17ஆம் திகதி வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது. இதன்போது பிரதியமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன் தலைமையிலான பிரமுகர்கள் அமைச்சருக்கு வாழ்த்துத்தெரிவித்தனர்.

அதன் பின்னர் கொழும்பில் இடம்பெறும் கைதுகள், காணாமல்போதல் போன்ற தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பான விரிவான அறிக்கையை அமைச்சர் சந்திரசேகரனிடம் பிரதியமைச்சர் கையளித்து நடவடிக்கை எடுக்கபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டபோதே ஜனாதிபதியை சந்திக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது. இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் சந்திரசேகரன் கூறியதாவது, நாம் அரசாங்கத்துடன் இணைந்திருக்கின்றோம்.

எனவே, தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டியது எமது கடமையாகும். இன்று வடக்கு கிழக்கு மட்டுமன்றி மலையக வாழ் தமிழ் மக்களும் பாரிய நெருக்கடிகளை சந்திக்கின்றனர். பாது காப்பு நடவடிக்கைகளில் எமது மக்கள் சிக்கிக்கொள்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளில் யார் ஈடுபடுகின்றார்களென்பதைக் கண்டறிய வேண்டும். அத்தோடு கைது செய்யப்படும் தமிழ் மக்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதை உறவினர்களுக்கு அறிவிக்கவேண்டும்.

மலையக மக்கள் முன்னணி அரசாங்கத்துடன் இணைந்திருந்தாலும் தமிழ் மக்களின் துயரங்களை பார்த்துக் கொண்டு வெறுமனே இருக்கமுடியாது. நடை முறைச் சாத்தியமான, எமது மக்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். (அ-5)

ஓலைச் சுவடிகள் 17

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

### நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

***துளசி இலையை காதுக்குப்பின் வைப்பது ஏன்?***

காதுக்குப்பின் துளசிக்கதிர் அல்லது துளசியிலை சூடுவதற்கு இக்காலத்தில் யாரும் தயாராக மாட்டார்கள். அப்படி சூடுபவர்களை ''காதில் பூ வைத்தவன்' என்று ஏளனமாகக் கூறுவதுண்டு. ஆனால் காதுக்குப்பின் துளசி வைப்பதனால் பெரும் பயனடைந்தனர் பண்டைய மக்கள். மனித உடலில் மிகக் கூடுதல் உறிஞ்சும் சக்தியுடையது காதுக்குப் பின்புறம் என்பதை விஞ்ஞானம் நிரூபித்திருக்கின்றது.

துளசியின் மருத்துவ குணங்களை நாம் நன்கு அறிந்துள்ளோம். இந்த மருத்துவ குணங்கள் காதுக்குப்பின்னுள்ள சரும வழியாக ஊடுருவிச் செல்லும். இதவே பழங்காலத்துமக்கள் துளசியிலையை காதுக்குப் பின் சூடி வந்த ததற்கான காரணமாகும்.

பழங்காலத்தில் துளசிச்செடியை துளசிமாடம் கட்டி ஒரு புனிதச் செடியா கப் பராமரித்து வந்தனர். இதற்காக ஆசாரியர்கள் பல்வேறு விதிமுறைகளை யும் கூறியுள்ளனர். சூரிய ஒளி கிடைக்கும் இடத்தில் கிழக்குப் பக்கத்து வாசலுக்கு நேராக துளசி மாடம் அமைக்க வேண்டும். வீட்டின் தரையை விட உயர்ந்த மட்டத்தில் குறிப்பிட்ட அளவில் துளசித்தரை அமைக்க வேண்டும். துளசித் தரையில் நடுவதற்காக கிருஷ்ணதுளசி தேர்ந்தெடுக்க வேண்டும்.

# ஏழு தமிழர்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் ஏழு தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் கண்காணிப்பு குழு ஒருங்கிணைப்பாளரும் மேலக மக்கள் முன்னணி யின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மனோ கணேசன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியுள்ளதாவது, எந்தவொரு நபரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்ய சட்டத்தை நடைமுறைப்படுத்துவோருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் அதனை உரிய நடைமுறைகளின் கீழ் செய்ய வேண்டும்.

வெள்ளை வான் கும்பல் பாணியில் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது. இந்த விவகாரத்தை இலங்கை மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்கவின் கவனத்திற்குக் கொண்டு செல்லவுள்ளேன். இத்தகைய செயற்பாடானது ஏற்றுக் கொள்ள முடியாதது. நீதிக்குப் புறம்பானது என்றார் அவர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல , ஒரு நாடு பயங்கரவாதத்திற்கு முகம் கொடுக்கும் நிலையில் அனைத்து வகை நீதியான ஒழுங்குகளையும் கடைப்பிடிப்பது இயலாத விடயம்.

அதற்காகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர் அதனைத் தவறாக உபயோகிக்கக் கூடாது என்றார் அவர். (ச-5)

# கருணாரட்ணம் அடிகளாரின் மறைவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம்

(கொழும்பு)

மனித உரிமைகளைப் பாதுகாப்பதாக நாடகம் ஆடிக் கொண்டிருக்கும் மகிந்த அரசாங்கம் மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவரையே தனது கொலை கலாசாரத்திற்கு இரையாக்கியுள்ளது.

வடக்கு கிழக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு வின் ஸ்தாபகத் தலைவரான அருட்திரு. கருணாரட்ணம் அடிகளார் தமிழர்களுக்காகச் சர்வதேச ரீதியில் குரல் கொடுத்து வந்தவர் ஆவார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டித்துள்ளது.

கருணாரட்ணம் அடிகளாரின் மறைவு குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேந்திரன் வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இவரது படுகொலைக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்பதுடன் அரசாங்கத்தின் இவ்வாறான சூழ்ச்சி நடவடிக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது.

கடந்த 2002 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சமாதான ஒப்பந்த காலத்தின்போது அருட்திரு. கருணாரட்ணம் அடிகளார் வட. - கிழக்கு மாகாணத்திற்கான மனித உரிமை ஆணைக்குழுவை ஸ்தாபித்து அதன் தலைவராக செயற்பட்டு வந்தார்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டி தமிழர்களுக்காகவே தம்மை அர்ப்பணித்து சேவையாற்றியவர். இவ்வாணைக்குழுவில் முன்னாள் எம்.பிக்களான சந்திரநேரு மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரும் அங்கம் வகித்திருந்தனர்.

கடந்த 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சந்திரநேரு எம்.பியும் அதேயாண்டு டிசம்பர் மாதம் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியும் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். இறுதியாக அதன் தலைவரையும் நேற்று அரசாங்கம் தனது சதிவலைக்குள் சிக்க வைத்து விட்டது.

கருணாரட்ணம் அடிகளார், தமிழர் எதிர் நோக்கும் அடிப்படை உரிமை மீறல் விடயங்கள் தொடர்பாகவும் மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்தும் சர்வதேசத்திற்கு எடுத்துரைத்து வந்தார்.

அருட்திரு.கருணாரட்ணத்தின் படுகொலையானது தமிழ் மக்களுக்குப் பாரிய இழப்பாகி விட்டுள்ளது. இதற்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும். இந் நாட்டில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை சர்வதேச மட்டத்திற்கு மறைப்பதற்கான செயற்பாடுகளே இவ்வாறான படுகொலைகள் என்பதை சர்வதேசமும் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழர் விரோத பேரின்வாதம் தமிழ் ஆதரவாளர்களைத் தமது கொலை கலாசாரத்திற்கு இரையாக்கிக் கொண்டிருப்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது என தெரிவித்துள்ளார். (ச-5)

# இலங்கைக்கான அமெ. உதவி மீண்டும் ஒரு தடவை குறைப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் இலங்கைக்கான இராணுவ உதவி மீண்டும் ஒரு தடவை குறைக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கான அமெரிக்காவின் அடுத்த வருடத்திற்கான இரர்ணுவ உதவி குறித்த நிதி ஒதுக்கீட்டில் அந்நாட்டு ராஜாங்கத் திணைக்களம் இந்த முடிபினை பிரேரித்துள்ளது.

2008ஆம் ஆண்டிலும் இதேபோன்ற முடிபை எடுத்த அமெரிக்க அரசு இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி எதுவுமின்றி தனியே ஆயுத வன்முறைகளே அதிகரித்து வருவதனைக் குறிப்பிட்டு 2009ஆம் ஆண்டுக்கான தனதுநிதிஒதுக்கீட்டையும்குறைத்துள்ளது.

2008ஆம் ஆண்டு 7.4 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியைஇலங்கைக்கு ஒதுக்கிய அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் 2009ஆம் ஆண்டுக்கு அதனை 6.5 மில்லியனாக மேலும் குறைத்துள்ளது.

இனப்பிரச்சினை இலங்கையின் ஜனநாயகக் கட்டமைப்பை பலமிழக்க செய்துள்ளமை மட்டுமல்லாமல் மனித உரிமை மீறல்களை அதிகரிக்கச் செய்துள்ளதாக தனது முடிபு தொடர்பாக விளக்கமளித்துள்ள அமெரிக்க அரசு, வடக்கு கிழக்கில் நிலவும் தொடர்ச்சியான ஆயுத வன்முறைகள் அங்கு ஏற்படக்கூடிய வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் பாரிய அளவில் பாதித்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக ராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் ஒருவர் குறிப்பிடுகையில், நிதி ஒதுக்கீடு தொடர்பான முடிபை எடுப்பதற்கு தேவையான விபரங்களின் அடிப்படையில் வரையப்பட்ட பூர்வாங்க அறிக்கையே இது.

எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் மற்றும் அரசியல் அழுத்தங்கள் இந்த அறிக்கை அரசு மட்டத்தில் தீர்மானிக்கப்படுகையில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்றார். (ச)

# பிரான்ஸ் தூதுவராக யாழ்.முன்னாள் அரச அதிபர்?

(கொழும்பு)

பிரான்ஸின் புதிய இலங்கைத் தூதுவராக யாழ்.மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் காலத்தில் வெளிநாட்டு அமைச்சின் செயலாளராகவும் பதவி வகித்த லயனல் பெர்னாண்டோ நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னர் நெதர்லாந்துக்கான தூதுவராக பணியாற்றிய அனுபவம் கொண்ட இவர், சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற பேச்சுக்களில் பங்குபற்றிய அரசாங்கத்தின் முக்கிய பிரதிநிதிகளில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஜே.வி.பியின் பிளவு குறித்து...

இருவருக்குமிடையிலான குறுகிய நேர சந்திப்பின்போது மூத்த அமைச்சர்கள் சிலரும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அருகில் இருந்துள்ளனர். மக்கள் விடுதலை முன்னணிக்குள் ஏற்பட்டுள்ள பிளவு அரசாங்கத்திற்குச் சார்பாக அமைந்துள்ளதாக எதிர்க் கட்சி சார்ந்தவர்களும், இல்லை; ஐக்கிய தேசியக் கட்சிக்கே சார்பாக அமைந்துள்ளது என்று ஆளுந்தரப்பைச் சேர்ந்தவர்களும் பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

கொழும்பிலுள்ள ஹில்டன் ஹோட்டலில் தமிழ்-சிங்களப் புத்தாண்டு வாரத்தில் இச் சந்திப்பு நடைபெற்றது. தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவின் மகனின் திருமண வரவேற்பு வைபவத்தில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இது குறித்துக் கலந்துரையாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தத் திருமண வைபவத்திற்கு விசேட அழைப்பின் பேரில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ,எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க , அமைச்சர்களான கரு ஜெயசூர்யா, தினேஷ் குணவர்த்தன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் இன்னும் சில அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இவர்கள அனைவரும் ஒரே மேசையில் அமர்ந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது ஜே.வி.பியுடன் இணைந்து ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்ததையடுத்தே ஜே.வி.பிக்குள் ஐக்கிய தேசியக் கட்சியே பிளவு ஏற்படுத்தியதாக அமைச்சர்கள் குற்றஞ் சாட்டியதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# கிளைமோர்த்...

காவலரண் அமைந்துள்ள பகுதியிலிருந்து தொலை தூரத்தில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் இதனை இராணுவத்தினர் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் பிளவுபட்ட சக்திகள் இருப்பதாகவும் இத் தாக்குதல் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளமையால் இதனை விடுதலைப்புலிகளே ஏற்க வேண்டும் என்று அவர் பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார். (ச-2)

# கிளைமோர்த் தாக்குதலில்...

2002 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பின்னர் வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தினை ஆரம்பித்து அதன் தலைவராக கருணாரட்ணம் அடிகளார் பணியாற்றி வந்தார்.

வடக்குக் கிழக்கில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களை இந்தச் செயலகம் அறிக்கைஇட்டு வந்ததுடன் சர்வதேசத்திற்கும் தெரியப்படுத்தி வந்தது.

இந்தச் செயலகத்தின் உறுப்பினர்களாக சுட்டுக் கொல்லப்பட்ட மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், முன்னாள் அம்பாறை மாவட்ட எம்.பி. சந்திரநேரு உட்படப் பலரும் அங்கம் வகித்திருந்தனர்.

ஆழ ஊடுருவும் படையினரின் கிளைமோர்த் தாக்குதலிலேயே கருணாரட்ணம் அடிகளார் கொல்லப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். கருணாரட்ணம் அடிகளார் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து தனது வாகனத்தில் புறப்பட்டு திருப்பலி பூசை ஒன்றுக்காக மல்லாவி நோக்கிச் சென்று கொண்டிருக்கையிலேயே வீதியோரத்தில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த கிளைமோர்க் குண்டு வெடித்துள்ளது.

கிளைமோர்த் தாக்குதலில் கருணாரட்ணம் அடிகளார் பயணம் செய்த வாகனம் பெரும் சேதமடைந்தது. வடக்குக் கிழக்கு மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்து வந்த அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளார் இடம்பெயர்ந்த மக்களுக்குச் சேவை செய்வதில் தம்மை முழுமையாக அர்ப்பணித்திருந்தார்.

அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளார் துறவறம் பூண்டு குருவாவதற்கு முன்னர் வங்கி அதிகாரியாகப் பணியாற்றி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. 1951 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் கரவெட்டியில் பிறந்த கருணாரட்ணம் அடிகளார் தனது ஆரம்பக் கல்வியைக் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ். பத்திரிசியார் கல்லூரியிலும் மேற்கொண்டார்.

கல்லூரிப் படிப்பின் பின் வங்கி ஒன்றில் அதிகாரியாகப் பணியாற்றினார். பின்னர் குருத்துவக் கல்லூரியில் சேர்ந்து 1989 ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் குருத்துவத்தில் நுழைவதற்கு முன்பு 1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல் பிரசாரங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதான பேச்சாளராகத் திகழ்ந்தார். (ச-2,5)

# பகவதி...

ஆணைக்குழுவின் விசாரணைகள் குறித்து பகவதி தலைமையிலான குழுவினர் முழுமையான அறிக்கை ஒன்றினைக் கையளிக்கத் தவறிவிட்டதாக ஹெல உறுமயவின் பேச்சாளர் நிஷாந்த சிறிவர்ண சிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மீது சர்வதேச நாடுகள் தவறான பார்வையைச் செலுத்துவதற்கு சர்வதேச பிரமுகர்கள் குழுவின் தவறான அறிக்கைகளே காரணம் என்றும் அவ்வாறு தவறான அறிக்கைகளை ஊடகங்களுக்கு வெளியிட்ட பகவதி குழுவினர் தமது பணியின் பிரதான அம்சமான விசாரணைகள் தொடர்பான தமது அவதானங்களை ஜனாதிபதிக்கும் சட்டமா அதிபருக்கும் வழங்கத் தவறிவிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# இலங்கைக்கு...

ஆயுதக் கொள்வனவுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றது.

இஸ்ரேலிய அரசாங்க விமானம் மற்றும் இராணுவத் தளபாடத் தொழிற்சாலைகளிடம் பல முறை நேரில் பார்வையிட அனுமதி கோரியும் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்குத் தொலைபேசியூடாகவே மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் இஸ்ரேலியப் பயணத்தைத் தொடர்ந்து கடற்படை மற்றும் தரைப் படையினருக்கான பெருந்தொகையான இராணுவ உதிரிப்பாகங்கள் மற்றும் இதர தளபாடங்களை வழங்குவதை இஸ்ரேல் நிறுத்தி வைத்து விட்டதாகவும் இஸ்ரேலியச் செய்திகள் தெரிவித்தன. (ச-5)

# மரண அறிவித்தல்

## அருட்திரு. எம்.சேவியர் கருணாரட்ணம்

யாழ்.மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. எம்.சேவியர் கருணாரட்ணம் (கிளி) அடிகளார் நேற்று 20.04.2008இல் வவுனிக்குளத்தில் அகால மரணமடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் இறைமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இவரின் நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
அருட்திரு.யஸ்ரின் ஞானப்பிரகாசம்,
குருமுதல்வர், யாழ்.மறை மாவட்டம்.

(C-1048)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.